# திறவுகோல்


2051 ஆடி
மாத இதழ்

கொரோனா சூழ் உலகு!..

சாத்தான்குளம்

பெண்ணே செவிக்கேள்!!

மன அழுத்தம்



வெளியீடு
மன்னையின் மைந்தர்கள் அமைப்பு

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் குழு ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

மண்ணின் மாற்றத்தை நோக்கி

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு, இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. தற்பொழுது அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படை வசதிகளை சரி செய்து கொண்டு வருகிறார்கள்.

நோக்கம்

மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

# கொரோனா சூழ் உலகு!..

உலகமே இக்கட்டான தருணத்தில் தன்னை ஆட்படுத்திக்கொண்டுள்ளது. நாகரிகம், வளர்ச்சி என்ற பெயரில் இயற்கையை புறந்தள்ளி அனைத்தையும் செயற்கையில் உருவகப்படுத்திய மனிதன் இன்று தன்னை தற்காத்துக்கொள்ள இயலாது மற்றவர் மீது பழிசுமத்தி கொண்டிருக்கும் அவலநிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறான்!.

அறிவியல் என்ற பெயரில் ஏவுகணைகளையும், துப்பாக்கிகளையும் உருவாக்கியவன் ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்க மறந்துவிட்டான். உலகின் வல்லரசு என பீத்திக்கொண்ட நாடுகள் தொடங்கி உலகின் சுகாதார தலைசிறந்த நாடுகள் வரை கோட்டைவிட்ட மருத்துவ தன்னிறைவு என்பதை இன்று கேள்விக்குறியாக்கிவிட்டது கொரோனா!.

சாதிமத, இனப் பாகுபாடின்றி ஏழை பணக்காரன் என்ற பொருளாதார பாகுபாடின்றி வீதியெங்கும் பிணக்குவியலாக குவிந்து கிடக்கும் நிலைமையை உலகமெங்கும் உருவாக்கியுள்ளது வைரஸ். இயற்கை இறுதியாக ஒரு வாய்ப்பை வழங்கியுள்ளது, இந்த தருணத்தில் கூட மனிதன் தன் தவற்றை மறுபரிசீலனை செய்யவில்லை எனில் இனி எந்த ஒரு கட்டத்திலும் மனித இனத்தை காப்பாற்ற இயலாது!.

இத்தகைய சூழலில் இந்திய தேசத்தின் நிலை?!.

‘‘கங்கை நதி புறத்து கோதுமை பண்டம்
காவிரி வெற்றிலைக்கு மாறு கொள்வோம்
சிங்க மராட்டியர் தம் கவிதை கொண்டு
சேரத்து தந்தங்கள் பரிசளிப்போம்’’

என்றான் மகாகவி பாரதி. ஆனால் இன்று தேசத்தின் நிலை பாரதியின் கூற்றுக்கு எதிர்மறையாக உள்ளது. தற்சார்பு பொருளாதரத்தை உருவாக்காமல் நாட்டை பன்னாட்டு முதலாளிகளின் ஆய்வுக்கூடமாக மாற்றிவிட்டார்கள். இதனால் மக்களின் உயிர் காப்பாற்ற வேண்டிய நேரத்தில் அண்டை நாடுகளிடம் மருத்துவ உபகரணங்களுக்கு கையேந்தும் நிலையில் இருக்கிறோம்!.

கண்ணுக்கு தெரியாத நோயோடு போராடும் நேரத்தில் கூட மதத்தால் பிரிவினை ஏற்படுத்தும் செயலை ஊக்கப்படுத்தி வருகின்றனர். ஆக்கப்பூர்வமான செயல்களை முன்னெடுக்காமல் அரசியல் செய்கின்றனர் மக்கள் உயிரில்.

ஊரடங்கு பிறப்பித்து மக்கள் வீட்டுக்குள் முடங்கி கிடக்கும் சூழலில் அன்றாட தொழிலாளர்கள், சிறுகுறு நிறுவனங்கள் என அனைத்து தரப்பினரும் வாழ்வாதார

பிரச்சனையில் இருக்கும்போது அவர்களுக்கான அத்தியாவசியங்களை செய்ய இயலாது மக்களிடமே கையேந்தி நிற்கிறது அரசு?!.

அடித்தட்டு மக்களின் வாழ்வாதரத்தை உறுதிப்படுத்தவேண்டிய அரசு, பன்னாட்டு முதலாளிகளின் ஏவலாய் செயல்பட்டு அவர்களின் வாராக்கடன்கள் பல லட்சம் கோடிகளை தள்ளுபடி செய்தது. அன்றாட நாட்டில் பலகோடி மக்கள் ஒருவேளை சோற்றுக்கே திண்டாடும்போது தன்னுடைய வலிமையை காட்டுவதாக நினைத்து பலகோடி செலவில் சிலைவைத்து மக்கள் பணத்தை வீணடிப்பு செய்தது.

நோய் எதிர்ப்பை பாதுகாப்பாக கையாளவேண்டிய அரசு அதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்ய நிதியில்லை நிவாரணம் வழங்க நிதி தாருங்கள் என மக்களிடம் கையேந்தும் அரசு, இத்தகைய இக்கட்டான சூழலில் பல கோடி செலவில் புதிய பாராளுமன்றம், பலகோடிக்கு ஏவுகணை தளவாட பொருட்கள் என தன்னுடைய இருப்பை தக்கவைத்துக்கொள்ளவே துடிக்கிறது!.

பணமதிப்பிழப்பிற்கு பிறகு மெல்ல தலைதூக்கிய பொருளாதாரம் மீண்டும் அகலபாதளத்தை நோக்கி சென்றுவிட்டது. ஊரடங்கு காலத்திற்குள் விலைவாசி உயர்வு எக்குதப்பாக உயர்ந்து அன்றாட காட்சிகளின் வாழ்கை நகர்வு கேள்விக்குறியே?!. பங்குச்சந்தை முதல் சிறுகுறு நிறுவனங்கள் வரை வீழ்ச்சியை சரிசெய்ய இன்னும் இரண்டு முதல் ஐந்து வருடங்கள் தேவைப்படலாம், இந்த காலகட்டத்திற்குள் எத்தனை சிறுகுறு நிறுவன முதலாளிகள் தேய்ந்து தொழிலாளியாய் நிற்பார்களோ?!.

கல்வி, வேலைவாய்ப்பு மற்றும்  மருத்துவத்திலும் தனியார்துவத்தை உட்புகுத்தி, தன்நிறைவு பெறாத அரசு இதுபோன்ற இயற்கை சீற்றத்தை எதிர்கொள்ள இயலாது கையேந்தி நிற்கும் என்பதற்கு நம் தேசமே சிறந்த உதாரணம். சொந்த நாட்டில் வாழ வழியின்றி குடும்பத்தை காப்பாற்ற கடல் கடந்து பல தேசங்களில் வேலைக்கு சென்றவர்கள் தற்போது தங்கள் எதிர்காலத்தை நினைத்து வேதனையில் நிற்க்கும் சூழலில் அங்கும் மதசாயத்தை பூசி அவர்களின் தற்போதைய நிலையை கேள்விக்குறியாக்கிவிட்டது அரசு.

தன்னிறைவு பொருளாதரத்தை முன்னெடுத்து, தனியார் மயத்தை கட்டுப்படுத்தி, வேலைவாய்ப்பை உருவாக்கி கல்வி, மருத்துவத்தை அரசுமயமாக்கி சிறுகுறு நிறுவனங்களை ஊக்கப்படுத்தி சாதிமத அரசியலை களைந்து அடுத்தகட்ட நகர்வை நோக்கி நாட்டை வழிநடத்து தவறினால் தேசமும் சோமாலியாவே!!..

தற்போதுவரை மருத்துவ உபகரணங்கள் இல்லாமல் மருத்துவர்கள், செவிலியர்கள் உட்பட இறப்பு விகிதம் சராசரியாக உயர்ந்து வருகின்றது. கொரோனா சமூக பரவலாக மாறி உயிர்களை காவு வாங்கி வருகிறது, பொதுமக்களும் சிறிது கூட பொறுப்புணர்வு இன்றி சமூக இடைவெளியை கடைபிடிக்காமல் நடந்துவருகின்றனர்.

நம் வீரத்தை நிரூபிக்கும் நேரம் இதுவல்லவே.. கொரோனா தொற்றால் உலகமே மிரண்டு இருக்கும் நேரத்தில், கொரோனா எங்களை ஏதும் செய்யாது எங்ககிட்ட வராது என வீரவசனம் பேசி திரிந்தவர்கள் இனி வீட்டிற்குள் முடங்கியே ஆகவேண்டும்..!

உங்களுக்காக இல்லாவிடினும் உங்கள் குழந்தைகளுக்காக, உங்கள் வீட்டில் வாழும் பெரியவர்கள் மற்றும் உடல்நிலை பாதிக்கபட்டவர்களுக்காக உங்கள் வீர சாகசங்களை ஒதுக்கி வைத்துவிட்டு சமூக விலகலை பின்பற்றி வீட்டில் இருங்கள். அத்தியாவசிய தேவைகளை தவிர்த்து எதற்க்காகவும் வெளியில் சுற்றித்திரிய வேண்டாமே...!

இளைய தலைமுறைய நீங்கள் தான் வருங்கால தேசத்தை நிர்மாணிக்கவேண்டிய சிற்பிகள், உங்கள் உயிர் இந்த தேசத்தின் நலனுக்காக இருக்கட்டும். தேசத்தை பற்றி அக்கறையில்லையா..? பரவாயில்லை உங்கள் குடும்பத்தினர் நலனுக்காகவாது இருக்கட்டுமே ) :-

உங்கள் இருசக்கரவாகன சாகசங்களை ஒத்திவைத்துவிட்டு வீட்டில் பயனுள்ள புத்தகங்களை வாசியுங்கள், பொது அறிவை வளர்த்துக்கொள்ளுங்கள், வருங்கால தற்சார்பு பொருளாதார வாழ்க்கைக்கு தேவையான விசயங்களை உள்வாங்கி கற்றுக்கொள்ளுங்கள், உங்கள் வாழ்க்கை அழகாகட்டும்...!

சீனா, இத்தாலி என கேள்விப்பட்ட விசயம் தற்போது நம் மண்ணிலும் கோரத்தாண்டவத்தை நிகழ்த்த ஆயுத்தமாகிவிட்டது. இனியும் நாம் செய்யும் அலட்சியம் நம்மையும் நம் தலைமுறையையும் பாதிக்கும்..!

‘‘உயிர் உன்னதமானது‘‘

விழிப்புடன் இருப்போம்..!
சமூக விலகலை கடைபிடிப்போம்..!

விழிப்புணர்வுடன்..,



கி. எல்லாளன்
வாலாந்தரவை அஞ்சல்,
இராமநாதபுரம் மாவட்டம்

# சாத்தான்குளம்

காக்கிச் சட்டைக்கு
கலங்கம்
சில அழுக்குகளால்!

சாத்தான்குளத்தில்
தடியோடு
ஊர்வலம் வந்திருக்கின்றன
சில சாத்தான்கள்!

லாக்கப்
எப்போது மாறியது
கசாப்புக் கடையாக?

இரு உயிர்களை
கடித்துக் குதறியுள்ளது
வெறி நாய்கள்!
நல்ல காவலர்களுக்கும்
உன்னால் இன்று
தலைக்குனிவு!

மூடனே!
உன் லத்திக்கும்
சிகப்பு வண்ணமடிக்கத் தேவை
சாமானியனின் இரத்தமா?

தராசு
நீதி தேவதைக்கு மட்டுமல்ல
வியாபாரிக்கும்
ஏன்? உனக்கும் தான்!

மக்களுக்கான வேலியே!
நீ மேய்ந்தது
கூலியை வழங்கிய பயிரையே!

நிர்வாணமாக்கி அடித்தவனே!
அவனின் வரிப்பணத்தில் தான்
மிடுக்காக நிற்கிறது
உன் ஆடை!

தடி உண்டு
துப்பாக்கி உண்டு
கை விலங்கு உண்டு
லாக்கப் உண்டு
இதைத் தாண்டி
காக்கிக்குள் உண்டா
இதயம்?

உங்களின் இதயமென்ன
வெறும்
இயந்திரந்தானா?

குற்றத்தை தடுக்குமிடமா
குற்றத்தை வளர்க்குமிடமா?

நீ
காவலனா?
காலனா?

உன் மன அழுத்தத்திற்கு
மருந்து
இரு உயிர்களா?

கேள்விகளால்
விலங்கிடுகிறது
மக்கள் மன்றம்!

காக்கிச் சட்டையை
கழற்றியுள்ளது
நீதி மன்றம்!

உண்(மை)யை நிரப்பி எழுது
தகவல் அறிக்கை
பொய்யை நிரப்பி எழுதாதே!

பலரது அலறல்களால்
கிழிந்தே போயிருக்கிறது
லாக்கப்களின் செவிகள்!

இருண்ட இடத்தில்
எப்போது கிடைக்கும்
நீதியின் வெளிச்சம்

பூட்ஸ்களின் சத்தத்தில்
குரல்வளையை நசுக்கியவனே!
கோடி குரல்வளைகளின் குரல்
உன் செவியைக் கிழிக்கும்


காக்கிக்குத் தான்
மரியாதை!
அதைக் கழற்றினால்
நீயும் அம்மணம் தான்!

ஒன்று புரிந்துகொள்!
நீங்களும் மனிதர்கள் தான்
எதேச்சதிகாரிகள் அல்ல...
நாங்களும் மனிதர்கள் தான்
அடிமைகள் அல்ல!

உன் தடி
உயிரை எடுக்கும்!
எங்கள் தடி
உரிமைக் கொடிப் பிடிக்கும்!



**- சா.கா.பாரதி ராஜா,**
38-3, கைலாசநாதர் கோயில் தெரு,
பெரிய நத்தம்,
செங்கல்பட்டு - 603002.
9944315732, 8610078040






S.K. நிருபன்

# பெண்ணே செவிக்கேள்!!

என் சாமி? என் சாமி?
என்ற வார்த்தை!!
என் செவிகளின் வழி ஊடுருவி என்
நெஞ்சை கூறுகூறாக உடைக்கிறது!

போர் களம் சென்று ஒரு நாட்டையே
எதிர்த்து போராடி வென்ற மாவீரன்
வாழ்ந்த மண் இது!
அன்று பெண், தெய்வமாக
மதிக்கப்பட்டாள்.
இன்று?

முன்விரோதம் என்ற ஓர் எச்சை
காரணத்தை மனதில் புதைத்துக்
கொண்டு,
நீ மனித குலத்தில் பிறந்த ஆறு அறிவு
கொண்ட உயிர் என்பதை மறந்து,
சிறிது நேரம் மயக்கம் தரும் மதுவை
அருந்தி விட்டு,
அந்த குழந்தையின் கை கால்களை
கட்டி எரித்தியே!!
ஏய் மிருகமே!!
உனக்கு எதற்குடா மரியாதை!

உன்னையெல்லாம் கைது செய்கிறதடா
என் அரசாங்கம்!!
அசிங்கமாக உள்ளது.
பணம் இருந்தால்,
இன்று அவளுக்கு நீதி
கிடைத்திருக்கும்!
புகழ் இருந்தால்,
இன்று அவளுக்கு நீதி
கிடைத்திருக்கும்!
அரசியல் பலம் இருந்தால்,
இன்று அவளுக்கு நீதி
கிடைத்திருக்கும்!

விவசாயின் மகளாய் பிறந்துவிட்ட
பாவத்தால் என்னவோ!!

தன் மண்ணிற்கே உரமாகிவிட்டாள்!!
இதைவிட்டுவிட இதற்கு நியாயம்
கிடைக்கவில்லை!

பெண் இனமே, உன்னிடம் ஒன்று
சொல்கிறேன்!

நீ ஒழுக்கத்தில் மட்டும் பெண்ணாக
வாழு!
உன் பெண் இனத்திற்கு ஒரு இழிவு
என்றால்
இறங்கி அடி!!
எதிர்த்து நில்!!

அரசியல் பலமாவது,
பண பலமாவது
உன் நீதி கோபத்தின் நியாய
பார்வையில்!

அதெல்லாம் சுட்டெரிக்கப்பட
வேண்டும்!
சட்டம் மாற வேண்டும்!
அதற்கு நாம் (பெண் இனம்) மாற
வேண்டும்!
இதுபோல் கொடுமை நடந்த
ஒவ்வொரு பெண்ணிற்கும் நியாயம்
கிடைக்க வேண்டும்!
தண்டிக்கப்படும் அந்த மனித மிருகம்!
கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு
ஒவ்வொரு பெண்ணின் தாய்
தந்தையின் முன்னிலையில்
தண்டிக்கப்பட வேண்டும்!
அநியாயம் செய்தவர்கள் அழிய
வேண்டும்!

தரப்படும் பணத்தால் அவள் வர போவதில்லை!!
தர மறுக்கும் நீதியை தந்தால் இனி வாழும் பெண்ணினமாவது பிழைக்கும்!!!



- பா.எழிலரசி பாலசுப்பிரமணியம் சாந்தி,
புவியியல் துறை,
மூன்றாம் ஆண்டு,
அ.வீரைய வாண்டையார் நினைவு ஸ்ரீ புட்பம் கல்லூரி பூண்டி,
(என் ஊர் மன்னார்குடி)

---

# வீரனின் மனைவி

எல்லை ஊடுருவல் தாக்குதல்
வீரமரணம்
யாருக்கு பதில்கூற விழைகிறார்கள்
இதன்மூலம்
பதிலடி கொடுக்க வேண்டுமாம்.
பதில் 'அடி' என்றால்
அது எப்படி சரி என்றாகும்,
கைது செய்வதும் சுட்டு வீழ்த்துவதும்
காட்டு மிராண்டிகளுக்கு பதிலென்றால்,
கைப்பெண்ணிற்கு என்ன பதில்
உரைப்பீர்கள்

உச்சி குளிர்ந்து மார்தட்டி வீரம்
பேசுபவர்களின் வரையிலும்
வீரனின் மனைவி விதைதான்
நெற்றி பொட்டில் முத்தம் பதித்து
நெடுந்தூரம் போனவன்
திரும்பி வரும் நாள் எண்ணி
தினங்களைத் திணறித்தள்ளுபவளுக்கு
இரத்தம் படிந்த சீருடை
எப்படி பதிலாகும்

வம்சம் தாங்கி வாசலில்
நிற்பவளுக்கு தெரியாது
பெட்டியோடு போனவன்
பெட்டியிலே வருவான் என்று
புகைப்படத்தை காட்டி
அப்பா என்று கூறச்சொல்லும்
கொடுமைக்கு யாரிடமேனும்
பதில் இருக்கிறதா
கேள்விகள் கேட்கும்
நிலையிலிருந்தும் வாய்திறக்காமல்
கணவனின் சீருடையை உதறி
பிள்ளைக்கு போட்டு
வழியனுப்புவளை கண்டு
உணர்ந்தேன் நான்
அவள் பதில் கேட்கவில்லை
தன் பிள்ளையின் மூலம்
பதிலுரைக்க விளைகிறாள் என்று
தேசியக்கொடியை வானுயர உயர்த்தி
பிடித்திருப்பது
நையிலான் கயிறல்ல எங்கள்
தாலிக்கொடி

சிந்தப்படுவது இரத்தமல்ல,
எங்கள் குங்குமம்.

--

மகாலெட்சுமி, BE
திருத்துறைப்பூண்டி

# வேறுபாடுகள் சூழ் உலகு



செந்தில் பக்கிரிசாமி
மன்னை

ஒருவழியா கோடை காலம் முடிஞ்சு தென் மேற்கு பருவமழை அங்க அங்க பெய்ஞ்சு கொஞ்சம் வெப்பத்தை தணிச்சு இருக்கு. ஆனால் இந்த கோடைக்காலத்தை தள்ளுறதுக்குள்ள நமக்கு நாக்கு தள்ளி போய்டுது. பேசாம இந்த கோடைக்காலம் முழுதும் ஊட்டி, கொடைக்கானல்ன்னு போய் இருந்துட்டு வரலாம்ன்னு பலருக்கு தோணும். இங்கதான் ஒரு சந்தேகம். அது ஏன் ஊட்டி கொடைக்கானல் மட்டும் எப்பவும் குளிர்ச்சியாவே இருக்கு?? மத்த இடங்கள் எல்லாம் ரொம்ப வெப்பமா இருக்குன்னு ??

இதுக்கு எல்லாருக்கும் தெரிஞ்ச காரணம் அவை தரைமட்டத்தில் இருந்து பல கிலோமீட்டர் உயரே இருப்பதுதான்ன்னு.

அது சரி. உயரத்தில் இருந்தா ஏன் குளிரனும்??அதைப்பத்தி விரிவா இந்த பதிவில் பாப்போம் .

காற்றின் அழுத்தமானது தரைமட்டத்தில் இருக்கும்போது அதிகமாக இருக்கும். அதற்கு காரணம் காற்றின் மூலக்கூறுகள் அடர்த்தி கடல்மட்டத்தில் அதிகம் இருப்பது தான். அதுவே உயரே போகப்போக காற்றில் உள்ள மூலக்கூறுகளின் அடர்த்தி குறையும். இதனால் தான் அழுத்தம் குறைகிறது. உதாரணமாக, கடல்மட்டத்தில் காற்றழுத்தம் 1 பார் (1 Bar) ஆக இருக்கும். 5 கிலோ மீட்டர் உயரத்தில் காற்றழுத்தம் பாதியாகக் குறைந்து ஏறக்குறைய h பார் ஆக இருக்கும். 10 கி.மீ. உயரத்தில் ஏறக்குறைய b பார் ஆக மேலும் குறையும்.

அது சரி. காற்றழுத்த வேறுபாட்டிற்கும் வெப்பநிலை மாறுபாட்டிற்கும் என்ன சம்பந்தம்ன்னு நீங்க கேட்கலாம்.

அதுக்கு முன்னாடி பூமியில் வெப்பம் எவ்வாறு உருவாகிறது என்பதை நாம் அறிய வேண்டும். சூரியனிடமிருந்து வரும் வெப்பம் நேராக பூமியின் தரையை தொடுகிறது .பின் அது பிரதிபலிக்கப்பட்டு உயரே நேராக வளிமண்டலம் நோக்கி செல்கிறது. அப்படி செல்கையில் இடையில் உள்ள காற்றானது வெப்பத்தை முடிந்த வரை தக்கவைத்து கொள்கிறது. கடல் மட்டத்தில் காற்றின் அடர்த்தி அதிகம் இருப்பதால் அதிக அளவு வெப்பத்தை தக்க வைத்து கொள்கிறது. எனவே கடல் மட்டத்தில் வசிப்பவர்கள் அதிக வெப்பத்தை உணர்கிறோம். அதுவே ஒரு உயரமான மலையின் மீதுப்பட்டு பிரதிபலிக்கும் சூரிய வெப்பத்தை அங்கே உள்ள காற்றின் அடர்த்தி குறைவாக இருப்பதால் அதிக வெப்பத்தை தக்க வைத்து கொள்ள முடியாது. எளிதில் வெப்பம் ஊடுருவி வளிமண்டலம் நோக்கி செல்லும். இதனால் தான் மலைப் பிரதேசங்களில் வெப்பநிலை குறைந்து குளிர்ச்சியாக உள்ளது.

இந்த இடத்துல இன்னொரு சந்தேகம் வரலாம். எப்படியும் சூரிய வெப்பம் தரையில் பட்டு பிரதிபலித்து நேராக வளிமண்டலம் தாண்டி சென்று ஒரு கட்டத்தில் பூமியில் வெப்பமே இருக்காதே, மொத்த பூமியும் குளிர்ல உறைஞ்சு போய்டுமே ன்னு தோணலாம். அதுக்குதான் பூமிக்கு மேலே ஒரு போர்வை போல பசுமைக்குடில் வாயு அதாவது கார்பன் டை ஆக்ஸைடு உள்ளது. அது பூமியின் வெப்பத்தை தக்க வைத்து கொள்ளும். இல்லை என்றால் பூமி வெப்பம் இல்லமால் உறைந்து போகும். இந்த பசுமைக்குடில் வாயு co2 அதிகம் ஆகும்போது தான் புவி வெப்பமயமாதல் அதிகம் ஆகும்.

திரும்ப நாம நம்ம தலைப்புக்கு வருவோம்.

இப்படி உயர்த்துக்குக்கு ஏத்த மாதிரி காற்றின் அடர்த்தி மாறுபட காரணம் என்ன??

இதை பத்தி தெரிஞ்சுகனும்னா,

வீட்டுல ஒரு பாத்திரத்தில தண்ணியை கொதிக்க வைக்கும் போது நீராவியானது வெளியேறும். அது உயரே மேல் நோக்கி செல்லும்.இதன் காரணம் நீராவியில் அடர்த்தி குறைவு. எனவே மேல் நோக்கி எழும்புகிறது. எனவே வெப்பத்தால் நீர் ஆவியாகும். அப்படி ஆவியாகும் நீரானது அடர்த்தி குறையும். அடர்த்தி குறைவான பொருளே மேல் நோக்கி செல்லும். கடல் மட்டத்தில் உள்ள தொடர் வெப்பத்தால் காற்றானது நீராவி போல ஆவியாகி மேல் நோக்கி செல்கிறது. இதன் அடிப்படையில் தான் கடல் மட்டத்தில் இருந்து மேலே செல்ல செல்ல அங்கே உள்ள காற்றின் அடர்த்தி குறைய காரணம்.

மேலும் இந்த காற்றுழுத்த மாறுபாட்டினால் இன்னும் சில விடயங்கள் கூட உண்டு.

விமான பயணங்களில் எப்போதும் சன்னல்கள் மூடியே இருக்க காரணம் கூட இந்த காற்றழுத்த வேறுபாடு தான். மிக உயரத்தில் விமானம் பறக்கும் போது காற்றின் அடர்த்தி வெகுவாக குறையும். இதனால் காற்றில் உள்ள ஆக்சிஜன் அடர்த்தியும் குறையும். எனவே சன்னல் திறந்தால் நாம் சரியான அளவு ஆக்சிஜன் இல்லமால் மூச்சு திணறி விடுவோம். இந்த காரணத்தால் தான் விமான சன்னல்கள் மூடியே உள்ளன. மேலும் பயணிகள் சுவாசிக்க போதிய அளவு செயற்கை ஆக்சிஜன் விமானத்திற்குள் பரவ விடுவார்கள்.

அதே போல விமான பயணத்தின் போது நமக்கு காதடைக்க இதுதான் காரணம். அதாவது நமது செவி யில் உள் புறம் வெளிப்புறம் என்று ரெண்டு விஷயம் உண்டு. உள் செவியில் உள்ள காற்றழுத்தம் தரைமட்டத்திற்கு ஏற்றார் போல் இருக்கும். (அதிகமாக இருக்கும்). ஆனால் வெளிப்புறம் காற்றழுத்தம் உயரே போக போக

குறைவாக இருப்பதால் உள் செவிக்கு போக திண்டாடும். இது தான் காதடைக்க காரணம். அந்த நேரத்தில் எச்சில் விழுங்குதல் போன்ற செயல்கள் செய்யும் போது உள் செவி காற்றை வெளியேற்றி விடும். அப்ப தான் வெளியே உள்ள அழுத்தம் குறைந்த காற்று உள் செவிக்கு வரும்.

இது மட்டும் இல்லை, இந்த காற்றழுத்த மாறுபாடு தான் நமக்கு மழை பெய்யவே காரணம்.

எனவே அனைத்தும் ஒன்றாக இருந்தால் இவ்வுலகம் இயங்காது. வேறுபாடுகள் இல்லமால் உலகம் இல்ல. வேறுபாடுகளை ஏற்றுக்கொள்வதே உலக நியதி..

--

## மன்னை செந்தில் பக்கிரிசாமி

---



ஓவியம்
**சுபா சபரி**

# ஊரடங்கு தேசத்தின் ஓயாத கால்கள்

உயிர்கொய்யும் இராட்சச மிருகமென்றறிந்தும் கடமை
சிறகுகளின் ஸ்பரிசங்களால் உலக குஞ்சுகளை காத்திடும்
இப்பறவைகளின் கால்கள்

உடல் முழுவதும் பிடரி முளைத்த உலக வனத்தின்
கோரவரக்கனை எதிர்த்து நிற்கும் வெள்ளை முயல்களின்
பிஞ்சுப்பாதங்கள்

அருவத்தின் அருவமாய் நீளவிருக்கும் விடநாவுகளை
வெட்டியெறியும் விக்கிரமாதித்தன்கள் வீதிதோறும்
காத்திருக்கும் காக்கியுடையில் அவர் கால்சுவடுகள்

குரூரத்தில் குளித்திருக்குமதன் உடலை வாஞ்சையின்
கரங்களால் வழித்தெடுக்கும் புறத்தழுக்கு நிரம்பிய
புண்ணியவான்களின் பொற்பாதங்கள்

சேவை நாமமெடுத்து தியாக சிலுவை சுமந்து மானுடத்திற்காக
மண்டியிட்டுதொழுமிந்த மாசில்லா தெய்வங்களின் கால்கள்

உலகத்தின் உய்வுக்காக உழைத்திருக்கும் கரங்களோடு
ஊரடங்கு தேசத்தில் ஓயாது இந்த கால்கள்

– நேசமுடன் ஈ.சு
உடுமலை
9080628870
eswaramesh22@gmail.com

# நிலாவே வா!

அனாதை சிசுக்களுக்கு
அன்புகாட்டி சோறூட்ட
ஒருவரும் இல்லையென்று
வளர்ந்தும் தேய்ந்தும்
வதைந்துகொண்டிருக்கிறாய்
வானில் நீ....
இன்பமும் துன்பமும்
இணைந்ததே வாழ்வென்னும் தத்துவம்
உன்னைக் கொண்டே
வான் நிகழ்த்தும்
உலகத்தின் அற்புதம்....

மாளிகை வாசிகளின்
மாலைநேர உற்சவமாகும் நீ
சாலைவாசிகளுக்குக்
கட்டணம் ஏதுமில்லா
கைவிளக்குக்காகிற
உன் கருணையொ கருணை!
இணைந்த காதலில்
ஆனந்த ஜோதியாகி
பிரிந்த காதலில்
ஈம நெருப்பாகி இதயம் எரிக்கும்
விசித்திர விழா நீ...

பகலெல்லாம் போரிட்டு
அந்தியில் மரணம் எய்தும்
கதிரவக் கணவனுக்காய்
வெண்ணிற ஆடையில்
விண்வெளியில் சுற்றுகிறாய்
விதைவையாய் நீ ...
ஈசனின் சடையில்
பிறைநகையாய்
அல்லாவின் தொழுகையில்
இறையொளியாய் ஒளிரும்நீ
சமய ஒருமைப்பாட்டின்
சாதனைச் சின்னம்....

இரவெல்லாம் ஆம்பலோடு
கற்புவாழ்வில் களிகொள்ளும் நீ
விடிந்ததும் கொஞ்சநேரம்
தாமரையோடு களவிலும்
இனிமைகொள்ளும்
உன் கலாபக் காதலை
யாரும் எதிர்ப்பதில்லையே ஏன்?

நடுஜாமத்தில்
நட்சத்திர வடகம் காப்பாய்
வியர்வையாம் பனித்துளியை
வெண்மேகத்தால்
துடைத்துக்கொள்வாய் ...
நரிகளின் ஊளை
ஆந்தைகளின் அளறல்
கூகைளின் குழறல்
ஒற்றைக்குயிலின் ஒப்பாரி
கரிச்சானின் கீச்சொலியால்
அனுதினம் விழா கொண்டாடும்
அதிசய கோவில்
நீயெழுந்தருளும் ஏகாந்த இரவு ...

கவிகளின் அலங்கார தேவதை
குழந்தைகள் கூப்பிட
கூடவே தொடரும் கோமாளி
பசித்தீயில் பௌர்ணமிநாள்
முழுவட்ட தோசை
விடியவிடிய
விண்மீன் புள்ளிகள் மட்டும்வைத்து
கோலங்கள் பழகாத
அந்தரத்தின் கோட்டைக்கு அரசி ...

பகலில் உறங்கும் வனங்களை
இரவில் தட்டியெழுப்பி
விதவித விலங்குகளால்
வேட்டைகள் நிகழ்த்தி இரசிக்கும்
விநோத இராட்சசி...
உன்னை ஆராய

அரசாங்கம் செலவிடும்
அளவில்லாப் பொருளாதாரத்தை
இல்லாத ஏழைகளின்
நல்வாழ்விற்கு ஒதுக்கிட்டால்
அன்றாடம் காய்ச்சிகள்
திண்டாட்டம் நீங்கிடும்
கொண்டாட்டம் ஓங்கிடும்....

வாழும் சூழ்நிலை உன்னில்
வாய்க்குமென்றால்
வல்லரசு நாடுகளின்
ரியல் எஸ்டேட் நிலமாகி
ஆழ்துளை கிணறுகளாலும்
ஆகாயம் முட்டும் மாளிகைளாலும்
சீரழிந்து சிதைந்துவிடலாம்
தண்ணீரை ஒளித்துத்
தண்ணொளியை மட்டும் மிளிர்த்து!



பொன். தெய்வா
ஐவேலி, விழுப்புரம் மாவட்டம்.

---

# கேட்பாரற்ற கடவுள்

வாழ்வின் இன்னல்களுக்கு விடைகொடுக்க வேண்டிடுவோம்,
இயற்கையை மதிக்கும் இதயங்களாய்  மாறிவிடுவோம்!

நாடித்துடிப்பை நலம் பயக்கும் நம்மூர் கடவுள்கள்,
மரத்தடி நிழலியிலும் வீதியோரங்களிலும் வீற்றிருப்பது வேதனையாய்!

திருவிழாக்காலங்களில் கிடைத்திடும் ஒருவேளை உணவுக்காக
வறண்டு போன சிலைகள் ஆசிரம குழந்தைகளாய்!

ஆழ்மனதில் அனுதாபம் விதைத்து செல்கிறது
கேட்பாரற்ற சமூகத்தில் கடவுளுக்கே இந்நிலை!
விஷமிகளை வேரறுக்க  தன்னெழுச்சியாய் தோன்றிடுமோ?
அலட்சியம் செய்த மனிதத்தை ஒதுக்கியே
சென்றிடுமோ?

- செல்வராணி சாமி
மன்னார்குடி

# விஞ்ஞானிகளுக்கு ஒரு வேண்டுகோள்..!



விஜயவர்மன்

நலம், நலமறிய ஆவல். நிலவில் தடம் பதிக்க தகுதியுடைய ஒரு சில நாடுகளின் பட்டியலில், விஞ்ஞான வளர்ச்சியால் இந்தியாவும் தன்னை இணைத்துக் கொண்டது. செவ்வாய் கிரகத்தில் மனிதன் வாழ்வதற்குறிய சாத்தியக் கூறுகளை அலசி ஆராய தொடங்கியாயிற்று. கல்வி, மருத்துவம், தொழில்நுட்பம் என எண்ணற்ற துறைகளில் பல எல்லைகளை கடந்து சென்று கொண்டிருக்கின்றோம்.

பல துறைகளில், பல கோணங்களில் வளர்ச்சியை எட்டிக் கொண்டிருக்கும் பொழுதும், பல நுட்பமான அறிவுகளை கற்றுத் தேர்ந்த பொழுதும், உடனிருக்கும் சக மனிதர்களின் மனதின் ஆழத்தை மட்டும் இன்று வரை அறிய முடியவில்லை. ஜூலியஸ் சீசர் முதல் வீரபாண்டிய கட்டபொம்மன் வரை இன, மொழி பாகுபாடின்றி, கால வரையின்றி வஞ்சகத்தால் வீழ்ந்த வரலாறுகள் பல உண்டு.

அடி வயிற்றில் தழல் கொதிக்க, நாவால் குளிர்ச்சியாக உரையாடும் பல நய வஞ்சகர்கள் சூழ்ந்த சமூகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அதிர்ஷ்டவசமாக, வன்மம் செய்யும் உறவுகள் கிடைக்கவில்லை எனினும், ஒருவருக்கொருவர் உதவக் கூடிய நிலை இல்லாமல் போனது வருத்தமே.

உற்றார் உறவினரின் உதவியை எதிர்பாராமல், சுயமாக உழைத்து முன்னேறி, ஓர் நிலையை எட்டுவதற்குள் உடனிருக்கும் ஒருவன் புற முதுகில் குத்துகிறான்; அவனிடமிருந்து மீண்டு மறு முறை எழுவதற்குள், மற்றொருவன், வேறொருவன் என இங்கே துரோகங்களின் பட்டியல் நீள்கிறது.

காலச் சக்கரம் சுழல, வஞ்சனைகளை கடந்து, அனுபவ வெள்ளத்தில் நீந்தி கரையேறிய சிலர் கொள்ளும் வெற்றியின் பெருமிதம், ஏனையோர்களுக்கு கர்வமாக தெரிகின்றது. அதனை கர்வமாக நினைத்து பொறாமை கொள்ளும் அவர்களுக்கும் சேர்த்து தான் இங்கே ஓர் வேண்டுகோளை வைக்கின்றேன்.

சீன பொருட்களை புறக்கணிக்க போர் கொடி தூக்கினால், இங்கே ஒருவர் கூட அலைபேசி வைத்திருக்க முடியாது. மொபைல் போன்களின் மூலாதாரமான சிப்களை உருவாக்கும் இயந்திரம் ஒன்று கூட இந்தியாவில் இல்லை என தரவுகள் கூறுகின்றன. சீனா, ஜப்பான் ஆகிய நாடுகள் தொழில் துறையில் எவ்வளவோ முன்னேறிக் கொண்டிருக்கையில், மற்றவர்களுக்கு தீங்கு செய்வதற்காக பில்லி, சூனியம், ஏவல்

என செய்வினைகள் குறித்து ஆராய்ந்து கொண்டுள்ளது எங்கள் நாடு. சூழ்ச்சிகளால் ஆங்காங்கே சரியும் ஒவ்வொரு குடும்பமும் காப்பாற்றப்பட்டிருக்குமேயானால், இச்சமூகம் நிச்சயமாக 10 வருடங்கள் முன்னோக்கி சென்றிருக்கும்.
யார் பொறாமை கொண்டவர், யார் உண்மையான அன்பு கொண்டவர் என்று பகுத்தறிய முடியாமல் போகவே, ஒற்றுமை குழைந்து, கூட்டு முயற்சிகள் பல தொலைந்து போய்விட்டன. உடல் வெப்பத்தை கணக்கிடும் வெப்பமானிகள் எவ்வளவோ கண்டுபிடிக்கப்பட்டுவிட்டன. இந்த சமூகத்தை முன்னேற்ற விரும்பினால், மற்றவர் வயிற்றில் எரியும் வெப்பத்தை கணக்கிட ஒரேயொரு வெப்பமானியை கண்டுபிடித்து தாருங்கள்; இதன் பயனாக ஒட்டு மொத்த சமூகமும் முன்னேற்றமடையும்.

இப்படிக்கு,
உங்கள் கண்டுபிடிப்பிற்காக,
காத்திருக்கும் குடிமகன்.
**- விஜயவர்மன்**
மன்னார்குடி

---

# மகள்

மழையினூடே மின்னல் என
பிறந்த தேவதை அவள்!
ரோஜா இதழின் பனித்துளி
அவள்!
ஆயிரம் வண்ணத்து
பூச்சிகளின் வண்ணம்
அவள்!
துள்ளி குதித்து சிரிக்கும்
மான் குட்டி அவள்!
கொஞ்சி கொஞ்சி நடக்கும்
அன்னமயில் அவள்!
வாசனையில்
மல்லிகையின் நறுமனம் அவள்!
வண்டுகளின் ரீங்காரம் அவள்!
குயிலின் ஓசை அவள்!
குற்றால அருவி அவள்!
தித்திக்கும் சிறுவானி தண்ணி
அவள்!
வைகறையின் சூரியன் அவள்!
அந்திபொழுதின் பொற்சூடர் அவள்!
தேன்நிலவின் அம்சம் அவள்!
நட்சத்திர கூட்டத்தின் மையப்புள்ளி
அவள்!
எங்கள் வாழ்வின் அடையாளம் அவள்!
உலகின் மகாராணி அவள்!
இயற்கையின் பேர் அதிசயம் அவள்!
எனை வியாபித்து நிற்க்கும் தங்க மகள்
தமிழ் போல் வாழ்வாங்க வாழ
வாழ்த்துகிறேன்

இப்படிக்கு
**யாத்வி மீராக்காக**
**ரம்யா வினோத்குமார்**

# கண்களைத் தாண்டும் கனவுகள்

குட்டிச் செடியிலே மொட்டு
ரோஜாக்கள்
பூத்துக் குலுங்க ஆசை

வானத்து நிலவை
கையில் பிடிக்க ஆசை

பள்ளி செல்ல
சைக்கிள் வேண்டி ஆசை

பறந்து செல்ல
பட்டாம்பூச்சி ஆக ஆசை

கொட்டும் மழையில்
சொட்டும் துளியாக ஆசை

அப்பாவுக்கு ஒரு கடிகாரம்,
அம்மாவுக்கு ஒரு பட்டுச்சேலை
இது ரெண்டும் வாங்க ஆசை

படிக்கும் போதோ
பட்டம் பெற ஆசை

படித்த பின்னே
விண்ணை முட்டும்
கட்டிடம் கட்ட ஆசை

விண்வெளி பயணம் இல்லாவிடிலும்
சிறு விமான பயண ஆசை

விடலைப் பருவத்தில்
காதலுக்கு ஆசை

கணிந்த காதலுக்கு
கல்யாண ஆசை

கடன் இல்லா நாட்களை
கடந்திட ஆசை

பசி இல்லா பகலில்
வாழ்ந்திட ஆசை

முதிர்பருவம் நோயில்லாமல்
அமைய ஆசை

இப்படியாக கண்களைத்
தாண்டிய கனவுகள் கண்டு
விழித்தெழுந்து யோசித்தான்!

கனவுகள் எல்லாம்
பெருங்கனவாக இருக்கே..

ம்ம்ம் ஒரு நாள் நடக்கதானே
போகிறது!..
நம்பிக்கையுடன் நடை போட
ஆரம்பித்தேன்.

கண்களைத் தாண்டிய கனவுகள்
ஒவ்வொரு இரவும் நீள்கிறது!..

இந்த கனவுகள் காணவே
உறங்கிட ஆசை..

கனவுகள் சுகமே!



பொன்மணி தர்மராஜன், BE.,
பரவாக்கோட்டை.

# விருட்சம்

எல்லையில் நின்று எல்லையில்லா
இன்னல்களை அனுபவித்தாய்....!

இதயத்தை இரும்பாக்கி
கொண்டாய்....!
தேசப்பற்றை
உயிராக்கிக் கொண்டாய்....!?

தாயைப் பிரிந்தாய்..,!
தாய் நாட்டைக் காத்தாய்...!

தாலி கட்டியவளை பிரிந்தாய்....!
எல்லையில் வேலியை..
தொட்டவனை வென்றாய்....!?

பெற்ற மகனைப்
பிரிந்தாய் ...?
தேசத்தின் மகன்களை
காத்தாய்....!

எல்லையில் நீ
விழித்திருக்க...!

பதட்டத்தில்
உன் குடும்பம்
தூங்காமல் இருக்க...!

நாங்கள் மட்டும்
தூங்குகிறோம்..
நிம்மதியாக....?!

எதிரிகளிடமிருந்து
எல்லையைப்
பாதுகாக்க...
எதிர்த்துப் போரிட்டு வீரமாய்
வீழ்ந்தாய்..!?

மண்ணில் நீ விழுந்தாலும்...!
விதையாய் விருட்சமாய்
வளர்கிறாய்..!
ஒவ்வொரு இந்தியன்
இதயத்திலும்...!?



முனைவர் சா.சம்பத்
தேசிய பயிற்சியாளர்
மன்னார்குடி

# ஊரடங்கு

ஊரடங்கி கிடக்குதிங்கே
வீடடங்கி கிடங்க ராசா
ஆடுகளோட்டி மேய்த்து விட்டு
சாயுங்காலம் திரும்புறேன்

பொழுது விடிஞ்சதுமே
பக்கத்து வீட்டு மாமாவுடன்
தாயம் ஆடபோனாரு
அப்பாகிட்டச் சொல்லிடுங்க

சோறாக்கி வச்சிருக்கேன்
மறக்காம அப்பாவுக்கும் போட்டு
வைங்க
உச்சி வெயில் பொழுதுலதான்
விளையாட போகாதீங்க

நல்லவேளை இப்போ
டாஸ்மாக்கு மூடியிருக்கு
புருஷனத்தான் நினைச்சி தினம்
பெருமூச்சு விட்டாளே!

தொரட்டியால தழப்பறிச்சி
ஆடுகளுக்கு போட்டுவிட்டு
கருவேலங்காட்டுல தான்
சுள்ளி பொறுக்கப்போனாளே!

சுருக்குனுதான் முள்ளு குத்த
காலையுந்தான் தூக்கி பார்த்தா
வழிஞ்ச ரத்தம் தொடச்சிக்கிட்டு
முள் கிரீடம் சுமந்தாளே!

கொறிக்கலிக்கா மரத்துலதான்
தொங்குகிற காய் பறிச்சி
முந்தானையில முடிஞ்சிக்கிட்டா
மூத்தவனுக்கு பிடிக்குமெனு

வீடடைஞ்ச வேளையில
குழந்தைகள கொஞ்சிபுட்டு
கொறிக்கலிக்கா காய்களைத்தான்
கொறிக்கத்தான் கொடுத்தாளே

ஊரடங்கி கிடக்குதிங்க
வீடடங்கி கிடங்க ராசா
ஆடுகளோட்டி மேய்த்து விட்டு
சாயுங்காலம் திரும்புறேன்

அம்மா, தொற்று நோயி உன்னத்தான்
தொற்றாதா எனக்கேட்டான்
பதிலுக்கு மெல்லமாய்
புன்னகைத்தாள் பொன்னம்மாள்!



பெ. விஜயலட்சுமி
காஞ்சிபுரம்
6380704001

# என் ஊரின் பெருமை!!!


கார்த்திகா இராமதாஸ்

அழகான ஊர் வடுவூர்,
அது எங்கள் ஊர்,
பசுமையான ஊர்!

பாசம் கொட்டும் தாயாகவும்
பண்பு சொல்லும் தந்தையாகவும்
அன்பு காட்டும் அக்காவாகவும்
நேசம் வளர்த்த நண்பர்களாகவும்
கதை சொல்லும் பாட்டியாகவும்
என அனைத்து உறவுகளையும் ஒரே இடத்தில் கொண்டுள்ள ஊர் எங்கள் ஊர்!

பச்சைபசும் வயல்வெளியில்
பயிர்கள் ஆட,
பயிர்களுக்குள் நெல்மணிகள் மறைந்து சிரிக்க,

ஏரி-குளம், குட்டை, ஆறு அனைத்திலும் நீர் பொழிய,
இயற்கை நிழலாடும் எங்கள் ஊர்!

வடுவூர் என்றாலே நினைவிற்கு வரும் பலவற்றுள் முதலில் ஒன்று கபாடி!
எங்கள் ஊரில் உள்ள ஆடவர், பெண்கள் கபாடி ஆடி தோற்றதாக இச்சரித்திரத்தில்
இடமில்லை!

புழுதி பறக்கும் களத்தில் குருதிச்சொட்ட விளையாடும் கபடி!
நாலு பேரு ஒன்னா சேந்தா நடுவுல ஒரு கோடு போட்டு, அணிக்கு ரெண்டா பிரிச்சி
ஆசையோடு விளையாடும் கபடி!

இதயத்துடிப்பு
முற்றமடையும்போது
நாடித்துடிப்பாய்த்
துடித்துத் துடித்து
நிற்பதே
எங்கள் ஊர் கபடி!

எம் ஊரின் மற்றொரு பெருமையோ வடுவூர் கோதண்டராமர் கோயில்!
பக்தர்களின் மனங்களுக்கு பரவசமளிக்கும்.
பாவமழித்து மோட்சமடைய வழிவகையமைக்கும்!

சித்தர்களும் முனிவர்களும் வணங்கி வரும் பெருமைகளை கொண்ட கோயில் இக்கோயில்!

வடுவூரின் இயற்கை அழகை கண்டு அந்நிய பறவைகள் கூட புத்தக அளவில் இடம் பெற்றுள்ள எம் ஊர் ஏரியில் தஞ்சம் புகுந்துள்ளன!

இத்தகைய பெருமைகளை கொண்ட வடுவூரில் பிறந்தமைக்கு என்ன தவம் செய்தேனோ!!

-

கார்த்திகா இராமதாஸ்,
பொறியாளர்,
வடுவூர் புதுக்கோட்டை

---




அபிநயா ராமமூர்த்தி,
நீடாமங்கலம்

# கோபம்

மாமனாரின் சிடுசிடுப்பை
மருமகளிடம் திணித்துவிட்டு
மனச்சுமை குறைக்கிறாள் மாமியார்

பிள்ளையிடம் காட்ட பெற்றவள் இரக்க
தூரத்தில் நின்று அழுகிறது
அவன் தூக்கி எறிந்த பொம்மை

தொற்று போல ஒட்டும்
கோபத்தணலில் கொட்டும்
வார்த்தை வாழ்வைக் கெடுக்கும்

இருமுனை கூர் கொண்ட வாள்-
இதற்கு
இந்திரன் ஆயுதம் கூட மேல்

பரீட்சயமான மனிதர்களின்
பக்கத்தில் அண்ட விடுவதில்லை
வெடுக்கென உதிர்த்திடும் சொல்

எடுத்தெறிந்து பேசிவிட்டு
எதிரில் நிற்பவரை போகவிட்டு
எந்நாளும் நொந்து
என்ன பயன்...?

உமிழும் முன் கொஞ்சம்
உண்டு பாருங்கள் வார்த்தைகளை
கட்டாயம் சுவைப்பீர்கள் கசப்பை...

கண்டக்டர் சில்லரையில்
கடைகாரன் கத்துவதில்
மனைவி பாத்திரத்தில்
மருத்துவமனையில் காத்திருப்பில்

அர்ச்சகர் (மந்திர) உச்சரிப்பில்
அதிகாரி (இழுத்தடிக்கும்)
கையெழுத்தில்
வியாபாரி விலைவாசியில்
விவசாயி வயல் வரப்பில்
முதலாளி தொனதொனப்பில்
தொழிலாளி முனுமுனிப்பில்..
என நிலைக்கு ஏற்ப படபடப்பு...

தீக்கு இரையாகும் எல்லாம் தீர்ந்தால்
சாம்பல் மட்டும் மிஞ்சும்..
பொறுமை கொள் கொஞ்சம்...

ஆறாத சினம் ஆளுமையின்
அடையாளம் அன்று-
அகம்பாவத்தின் ஆணிவேர்
குணமானவனின் குறைபாடு
சஞ்சலத்தின் வெளிபாடு
உற்ற உறவை பற்ற வைக்கும்
ஊனம்...

--

**துர்க்கா சம்பத்குமார்**

# கார்கால தென்றல்

திக்கி திணறி தான் போகின்றேன்!
நீ என்னை வருடும் போது..!

திசை எங்கும் வீசும் நீ,
என் மேனிபடரும் போது
திக்கி திணறி தான் போகின்றேன்!

எப்பொழுதும் உன் அரவணைப்பு கிடைப்பதில்லை,
முக்கதிர் விளையும் இக்கார்காலம் தவிர!

அள்ளி அணைத்திட துடித்தேன்,
உன்னை ஆகபெரும் உவகையுடன்!

அங்கம் எங்கும் படர்ந்தாய்,
என் தீரா ஆவல் கண்டு!

என்னை மறந்தேன்,
கவலை மறந்தேன்,
புறத்தை மறந்தேன்,
அகிலதையும் மறந்தேன்!

புதிதாய் இப்பூமியில் பூத்ததாய் உணர்ந்தேன்,
புத்துணர்ச்சி பெற்றேன்!

கார்கால தென்றலே,
நீ என்னை தழுவும் போது
திக்கி திணறி தான் போகின்றேன்!

– சதீஷ்
விருதை

# அகவிளக்கு


இளவரசி இளங்கோவன்

வழக்கம் போல் அன்றும் தலைமுடியை இழுத்து வலியை பொருட்படுத்தாமல் சீவி இரட்டைப்பின்னல் போட்டுகொண்டிருந்தாள் அம்மா. பதின்மூன்று வயதான அப்பெண்ணுக்கு இயற்கை பெரிய பெண் என்ற மாற்றத்தை உடலில் ஏற்படுத்தி இருந்தாலும் உலகமே தெரியாத வெகுளி குழந்தை மனம் படைத்த சிறுமி அவள் என்பது அவளை பெற்ற அன்னைக்கே தெரியாத அதிசய உண்மை.வெகுளி தான் மக்கு அல்ல.

சாணம் தெளித்த வாசல் தரையில் அமர்ந்து தான் பெரும்பாலும் தலைசீவும் படலம் நடக்கும். நீயே சீவிக்கொள் என ஒருபோதும் அம்மா சொல்லியதில்லை. அவளுக்கும் கேட்க தோன்றியதில்லை. தனது ஊரிலேயே உள்ள அரசு மேனிலை பள்ளியில் ஒன்பதாம் வகுப்பு படிக்கும் அவள், உணவு இடைவேளைக்கு வீட்டுக்கு வந்து செல்லும் போது தன்னை விட இரண்டு வகுப்புகள் அதிகம் படிக்கும் பக்கத்துவீட்டு அக்கா மதியமும் முகம் கழுவி பவுடர் பூசி செல்வதை பார்க்கும்போது அவளுக்கு வியப்பாய் இருக்கும். தனக்கு ஒருபோதும் அவ்வாறு செய்து கொள்ள தோன்றியதில்லையே, ஏன் என தெரியவில்லை என நினைத்துக் கொள்வாள். அதுபோன்ற எண்ணம் கூட அவளுக்கு வந்தது இல்லை. அவள் எண்ணம் எல்லாம் முதல் மதிப்பெண் எடுக்க வேண்டும். எப்போதும் தன்னை முந்தி விடும் தன் சக மாணவனை விட அதிக மதிப்பெண் எடுக்க வேண்டும். அவள் கனவு அக்கறை எல்லாம் படிப்பை, மேற்படிப்பை, பணி செய்வதை சுற்றியே இருந்ததால் இது போன்ற அந்த வயதுக்குரிய எதையும் அவள் சிந்திக்கவில்லை.

அம்மா முடிக்கும் தருவாயில், பெரியப்பா வீட்டு அண்ணன் தன்னை விட மூன்று அல்லது நான்கு வயது பெரியவர், ஆனால் பல வகுப்புகளில் தோல்வியடைந்து தற்போது அவரும் ஒன்பதாம் வகுப்பில் வேறு பிரிவில் படிக்கிறார். இருசக்கர மிதிவண்டியை வீட்டிற்கு எதிரே சாலையில் நிறுத்திவிட்டு அவர்களை நோக்கி வருவதை கவனித்தாள். புருவம் சுருக்கி அம்மா அவரை நோக்கினாள். என்ன விடயம் என்ற கேள்வி அவளது பார்வையில் தொக்கி நின்றது. தொண்டையை செருமி கொண்டு ஆரம்பித்தார் அவர். ‘‘சின்னம்மா தங்கச்சி சொல்லவில்லையா? பள்ளியில் சில பசங்க தங்கச்சிகிட்டே வம்பு பண்ணுறாங்க. தங்கச்சி பெயரை கூட கையில் எழுதி வச்சுருக்காங்க. உங்ககிட்ட தங்கச்சி சொல்லலையா பாத்து பாத்திரம் ‘‘ என்று முடித்து கிளம்ப எத்தனித்தார். அந்த அப்பாவி பெண்ணுக்கு காலுக்கு கீழ் பூமி நழுவிய உணர்வு. பயம் அப்பிக்கொண்டது. நடுக்கம் கண்டது உடல். கட்டுப்பாடு இல்லாமல் கண்ணீர் பெருக்கெடுத்தது.

பலநேரங்களில் மனித செயலுக்கு காரணத்தை கண்டறிவது தேவையற்ற பயனற்ற செயலாகிவிடும். அன்று அந்த அண்ணனின் செயலில் வேரூன்றி இருந்தது உண்மையான அக்கறையா, பொறாமையா, வெறுப்பா, கோவமா இன்றுவரை கணிக்கமுடியவில்லை. அந்த அப்பாவி கிராமத்து சிறுமிக்கு சூது வாது, உலகம் தெரியாவிட்டாலும், அவளுக்குள் இருந்த ஏதோ ஒன்று அவளுக்கு சொல்லிக்கொண்டே இருந்தது படி,படி ,படிப்பு, கல்வி ஒன்று மட்டுமே எல்லா துன்பத்திலிருந்து உன்னை மீட்டெடுக்கும் என்று. பதின்பருவ கோளாறிலும், படிப்பில் விருப்பம் இல்லாமலும் இருந்த தன்னையொத்த, தன்னை விட பெரிய தன் வகுப்பிலும் மற்றும் பள்ளியில் பயிலும் பலரும், உண்மையில் காதலே அல்லாத அப்பருவத்தின் வெளிபாட்டை காதல் என கற்பிதம் செய்து கொண்டு ஒரு பெண்ணை பின்தொடர்வது, எங்காவது நின்றுகொண்டு விடாமல் பார்த்து கொண்டிருப்பது, பெயரை அல்லது பெயரின் முதலெழுத்தை கையில் எழுதிக்கொள்வது, சட்டையில் அப்பெண்ணின் பெயரின் முதலெழுத்தை வெளியில் தெரியும்படி அயர்ன் செய்து பள்ளிக்கு போட்டு வருவது இவ்வாறான பதின்பருவ சேட்டை செயல்களில் ஈடுபட்டு வந்தனர்.

இவளுக்கும் இவ்வாறான நெருக்கடிகள், சங்கடங்கள், அவளது ’உள்ளிருந்த படிக்க வேண்டும்’ என்ற உந்துசக்திக்கு பெரும் தொந்தரவாக இருந்தது. ஆனால் வீட்டிலே சொல்லும் அளவுக்கு வீடு அவளுக்கு நட்பாயில்லை. அம்மா எப்போதும் கண்டிப்பு காட்டி பயம் ஊட்டினாள். வீட்டிலே சொன்னால் படிப்பை நிறுத்தி விடுவார்கள் என்ற பெரிய பயம் அவளுக்குள். எப்படியும் சேட்டை மாணவர்களில் பலர் இந்த வருட பரிட்சையில் தோற்று வீட்டிற்க்கு சென்று விடுவார்கள். அப்படியே தேறினாலும் அடுத்த ஆண்டு பத்தாம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் நிச்சயம் தோற்றுவிடுவார்கள். அவர்கள் எல்லாம் பள்ளியை விட்டு சென்று விட்டால் இந்த பிரச்சனைகள் முடிவுக்கு வந்துவிடும். அதுவரை இவற்றையெல்லாம் பொறுத்து தான் போக வேண்டும் வேறு வழியில்லை என முடிவு செய்து தான் பொறுத்துக் கொண்டிருந்தாள். மேலும் தன் காரணத்தை சொல்லும் அளவுக்கு அவளுக்கு அன்று சுதந்திரம் இல்லை. யாரேனும் குரலை உயர்த்தினால் கூட அவளுக்கு பேச்சு மறந்து கண்ணீருடன் நிற்கும் பேதை சிறுமியாய் இருந்தாள்.

சீராக போய் கொண்டிருந்த வாழ்க்கையில் கஜா புயல் அடித்து வீழ்ந்த தென்னந்தோப்பானாள். அம்மா அடுத்து என்ன செய்ய போகிறாள் என கலவரம் கண்டது மனது. படிப்பை நிறுத்திவிடுவாளோ என்ற நினைவு கண்ணீரை மேலும் பெருக்கெடுக்க வைத்தது. அண்ணன் போகும்வரை பொறுத்த அம்மா, திண்ணைக்கு வந்ததும் விழுந்தது முதல் அறை கன்னத்தில். பிறகு தாறுமாறாக விழுந்தது அடிகள், வசவுகள். உடல், மனது இரண்டும் ஒருசேர துவண்டது. அடியை விட அம்மாவின் வார்த்தைகள் அளவிலா துன்பத்தை கொடுத்து. அடுத்து என்ன நடக்க போகிறதோ என நடுங்கி ஒடுங்கி சுவரோடு பல்லியாய் பள்ளியை பற்றிய எண்ணத்தோடு கண்ணீர் சொறிந்து கிடந்தாள். அவள் பக்கத்து நியாயத்தை பார்க்க யாருமே இல்லை அன்று.

செய்யாத தவறுக்கு வீண்பழி சுமந்து நின்றாள் அந்த பேதைச்சிறுமி.

அம்மாவின் கோபத்திலும் நியாயம் இருந்தது. அவளுக்கு கோபத்தை கொடுத்தது அன்றாடம் அவள் கிராமத்தில் நடக்கும் நிகழ்வுகள் தான். பள்ளிக்கு செல்லும் பெண்களில் பெரும்பாலோர் காதலே அல்லாத பருவஉணர்ச்சியை காதல் என்றெண்ணி படிப்பை விட்டு ஓடிப்போய் திருமணம் செய்து கொண்டு வாழ்க்கையை அவதானிப்பதற்குள் கைகளில் இரு பிள்ளைகளோடு, பொருள் தேட கணவனை வெளிநாடு அனுப்பி விரக்தியோடும், வேதனையோடும் அல்லலுறும் அவலநிலை அனுதினமும் அங்கே அரங்கேறுகிறது. முதிற்சி, கல்வி குடும்ப நடத்த அடிப்படை அறிவு, பொருளாதாரம் ஏதும் இல்லாமல் பருவக்கோளாறில் தவறு செய்து மண முடித்து மனமுடைந்து தங்களையும், தன் வருங்கால சந்ததியையும் வேதனையிலும் வறுமையிலும் விடும் கொடுமை தான் அம்மாவின் பயம் கலந்த கோபத்திற்கு காரணமாக இருந்ததை அந்த பேதைச்சிறுமியால் அன்று சிந்தித்துணர வழியில்லை .

அடுத்து என்ன செய்ய வேண்டும் என்ற சிந்தனையோடு வயலுக்கு சென்று திரும்பிய அப்பாவிடம் நடந்ததையும் கூற, கூடவே இவளும் வழி தவறி விட்டாள், அந்த பையனோடு பேசி கொண்டிருக்கிறாள். படிப்பில் கவனம் இல்லை என்று அவளது அனுமானத்தையும் சொல்லி இடையே சிறுமிக்கு இரண்டு அடியையும் கொடுத்து அவளும் அழுதாள். அப்பாவி அப்பா ஏதும் பேசாமல் காலை உணவை முடித்து வழக்கம்போல் அடுத்து வேலைகளை கவனிக்க சென்று விட்டார். அம்மாவும் பலமான சிந்தனையோடு மதிய உணவு தயார் செய்ய தொடங்கிவிட்டாள். ஒரு முடிவுக்கு வர அவளுக்கு அந்த சமையல் நேரம் உதவியது போலும்.

மதிய உணவு இடைவேளைக்கு வீட்டுக்கு வந்த தம்பியை பார்த்த பிறகே தான் காலையிலிருந்து கண்ணீர் சொறிந்து கிடப்பதும், இனிமேல் பள்ளிக்கு போகவே முடியாது போலும் போன்ற எண்ணங்கள் தோன்ற மீண்டும் கண்ணீர் பெருக்கெடுத்தது. தன்னை விட இரண்டு வயது இளையவன். விளையாட்டு பிள்ளை. வீட்டில் நடந்த ஏதும் அறியாமல் வழக்கம் போல் மதிய உணவை முடித்து பள்ளிக்கு கிளம்பி சென்றான். அப்பாவுக்கும் சாப்பாடு போட்டு எல்லாவற்றையும் ஒழுங்கு செய்து முடித்த அம்மா ஒரு தீர்மானத்தோடு தனது அழுக்கடைந்த புடவையை மாற்றிக் கொண்டு தலையை சீவிக்கொண்டு கிளம்பினாள். பேதைச்சிறுமியிடம் வந்து கடுமையான குரலில் கிளம்பு பள்ளிக்கு என்று அதட்டல் போட்டாள். பயந்து போனாலும் பள்ளிக்கு என்ற வார்த்தையை கேட்டதும் பெரிய நிம்மதி பரவியது உள்ளுக்குள்.

அம்மா முன்னே வேகமாக நடக்க, அவள் பின்னால் தலையைகுனிந்தபடியே நடந்துக் கொண்டிருந்தாள். எதிர்படும் எல்லோரின் விசாரணை கேள்விகளுக்கும், பார்வைகளுக்கும் ஒன்றுமில்லை, பள்ளிக்கூடம் வரை போய்வருகிறேன் வார்த்தைகளாலும், புன்னகையாலும் பதில் சொல்லி நடந்து கொண்டே இருந்தாள் அம்மா.

பள்ளியின் முகப்பை நெருங்கியவுடன் படபடவென்று அடிக்கதொடங்கியது இதயம் சிறுமிக்கு. உன்னுடைய வகுப்பு எங்கே, நேராக அங்கே செல் என உத்தரவிட்டு பின்தொடர்ந்தாள் அம்மா. அது கிராமத்து பள்ளி, மேலும் அங்கே பயிலும் எல்லோருமே பெரும்பாலும் உறவினர்களாகவும், ஆசிரியர்கள் அனைவரும் அருகில் இருக்கும் கிராமத்தையோ, சிறு நகரத்தையோ சேர்ந்தவர்களாய் இருந்தார்கள். கிராமத்து ஆட்களுக்கு அனுமதி பெற்று உள் செல்ல வேண்டும் என்பதெல்லாம் ஒருபோதும் நடைமுறையில் இல்லை.

உள்நுழைந்தவுடன் முதலில் இருந்த தலைமையாசிரியரின் அறையை தவிர்த்து சிறுமி படிக்கும் ஒன்பதாம் வகுப்பு அ பிரிவின் வாயிலில் சிறுமியை உள்ளே செல்ல சொல்லி விட்டு கோபத்தோடு பேச ஆரம்பித்தாள் அம்மா. மதிய உணவு இடைவேளைக்கு பிறகு சமூக அறிவியல் பாடத்தை நடத்திக் கொண்டிருந்த அந்த வேட்டியணிந்த உயரமான சதுர உருவம் கொண்ட, அண்மையில் தான் அந்த கிராமத்தில் வேலைக்கு சேர்ந்திருந்த அந்த ஆசிரியருக்கு ஒன்றும் விளங்காமல் பாடத்தை நிறுத்தி விட்டு சிறுமியை பரிதாபமாக பார்த்தார்.

அம்மா அனைத்து மாணவர்களையும் வசைபாடினாள். ஆசிரியர்களையும் விட்டு வைக்கவில்லை. அவமானத்தினால் சிறுமி துடிதுடித்து கூனிக்குறுகி தலை குனிந்து கண்ணீரால் தன் மரபலகையை கழுவிக்கொண்டிருந்தாள். அவள் அருகில் அமர்ந்திருந்த அவளது நெருங்கிய பள்ளித்தோழி ஆதரவாக கைகளை பற்றிக் கொண்டாள். அம்மா போட்ட சத்தம் கேட்டு அங்கே ஓடிவந்த தலைமையாசிரியர் வாருங்கள் பேசிக்கொள்ளலாம் என்று சமாதானபடுத்த முயன்றார். அம்மா ஒரு நிபந்தனையோடு அங்கிருந்து அகன்றாள். அதை தான் அவள் காலையிலிருந்து சிந்தனை செய்து கண்டுணர்த்திருக்கிறாள் போலும். அதைக்கேட்டதும் தன் கையை பற்றிக்கெண்டிருந்த தோழி கையை விடுவித்துக்கொண்டு நகர்ந்து அடுத்த மரப்பலகை இருக்கையில் அமர்ந்தாள்.

ஆம் எனது நினைவு தெரிந்த நாளில் நான் பெற்ற முதல் நெருங்கிய பள்ளித்தோழி அவள் தான். எனக்கு மிகவும் பிடித்தவள். ஆறாம் வகுப்பில் தான் எங்கள் ஊருக்கு வந்து எங்கள் பள்ளியில் என்னோடு சேர்ந்தாள். நகரத்தில் படித்ததால் எங்கள் வகுப்பிலேயே நாகரீகமானவள் அவள் தான். முன்நெத்தியில் முடியை குறுகியதாக வெட்டிவிட்டிருப்பாள். நல்ல நிறமாக தனிஅழகுடன் இருப்பாள். கிராமத்து மக்களுக்கு அவளது நடை, உடை பாவனைகள் வேறுவிதமாக இருந்தது போலும். பொறமைகூட காரணமாக இருந்திருக்கலாம். அம்மாவும் இந்த தவறான கணிப்பை கேட்டு நம்பி அவளோடு நட்பு தான் என்னையும் கெட வைக்கிறது என முடிவுக்கு வந்திருந்தாள். அதனால் தான் அவளோடு எனக்கிருந்த நட்பை அன்றோடு முறித்து போட்டாள். அவளோடு பேசினாலோ பழகினாலோ படிப்பை நிறுத்திவிடுவேன் என பயம் காட்டினாள்.

செய்தி பள்ளி ஆசிரியர்களுக்கு தெரிந்து அடுத்தடுத்த நடந்த வகுப்புகளில் அவளிடம் ஏதும் கேட்காமல் வகுப்புகள் அமைதியாக நடந்து முடிந்தது. பள்ளிக்கூடம் முடித்து வீடு திரும்பியவளிடம் வெறுமையும்,விரக்தியும் தனிமையும் ஒட்டிக்கொண்டன. வீட்டில் யாரும் முகம் கொடுத்த பேசவில்லை. தான் என்ன தவறு செய்தோம். எதற்காக இத்தனை கடுமையாக சொற்கள். நடத்தையை பழிக்கும் அவச்சொல். அந்த வயதில் பள்ளியில் உள்ள நட்பும், மரியாதையும்  ஒரு மாணவனுக்கோ மாணவிக்கோ எவ்வளவு உயர்ந்தது. அம்மா எல்லோர் முன்னிலையிலும் அவமானப்படுத்தி நட்பையும் முறித்து கூனி குறுக செய்துவிட்டாள். என்ன செய்வது என தெரியாமல் குழம்பி புத்தக பையோடு நடுவீட்டில் அமர்ந்தாள்.

எல்லாமே முடிந்து விட்டது போல் தோன்றியது. இவ்வளவு வசுவுகளையும் , பழிச்சொல்லையும் கேட்டுவிட்டு ஏன் இன்னும் உயிரோடு இருக்க வேண்டும். யாருக்கும் புரியவைக்க முடியாது. யாரும் தன்னை தன் உயர் கல்வி கற்கும் கனவு, சாதிக்க வேண்டும், வெற்றியாளராக வேண்டும், எக்காரணத்தை கொண்டும் திருமணத்திற்கு மட்டுமே தகுதி சேர்க்க அனைவரும் படிக்கும் அருகிலுள்ள மகளிர் கல்லூரிக்கு மட்டும் போகவே கூடாது போன்ற தனது எண்ணங்கள் அனைத்தையும் யாரும் புரிந்து கொள்ளப்போவதுமில்லை. அதுமட்டுமில்லாமல் இன்று குழி தோண்டி புதைத்தும் விட்டார்கள். ஏன் உயிரோடு இருக்க வேண்டும் என தோன்ற நிமிர்ந்தவளுக்கு நேராக கொல்லைப்புறத்திலிருந்த கேணி கண்ணுக்கு பட்டது.

சாவை எண்ணியதும் நெஞ்சுக்குள் பயம் அப்பிக்கொண்டது. சாவது கோழைத்தனம் இல்லை. வீரச்செயலும் இல்லை. அதற்கு ஒருதனி கிறுக்குத்தனம் வேண்டும் போலும். அது அவளிடம் இல்லை. உள்ளிருந்த ஏதோ ஒன்று எச்சரிக்கை விடுத்தது. கேள்விகளை எழுப்பியது. சரி நீ செத்து விட்டால் நாளை என்ன நடக்கும் இங்கே? அம்மா சொன்ன நினைத்த தவறான அபிப்ராயங்கள் எல்லாம் உண்மையாய் போகும். பொய் உண்மையாகும். உன் சாவு பொய்யை  உண்மையாக்கும். அதை தான் நீ விரும்புகிறாயா? சாவு உன் துன்பங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து விடுமா? ஒரு வாரம் உன்னை பற்றி பேசிவிட்டு மறந்து போவார்கள் இந்த மனிதர்கள். இதை தான் நீ அனுதினமும் கனவு கண்டாயா? அகத்திலிருந்து வந்த அந்த குரல் எழுப்பிய வினாக்களுக்கு விடை இல்லை அவளிடம்.

ஆனால் இருளை விரட்டி வெளிச்சம் போல் அவளுக்குள் இருந்த துன்பத்தை, மரண எண்ணத்தை  அந்த குரல், வினாக்கள் விரட்டியது. யாரும் இந்த ஊரிலே எடுக்காத மதிப்பெண் எடுத்து காட்ட வேண்டும். தான் யாரென்று இந்த உலகுக்கு, குறிப்பாக அம்மாவிற்கு காட்ட வேண்டும். தன்னை பற்றிய அவளது எண்ணங்கள் எல்லாம் தவறு என அவளுக்கு புரிய வைக்க வேண்டும். நீண்ட மூச்சை உள்வாங்கிய சிறுமிக்கு கண்ணீர் நின்றது. மனதுக்குள் ஒரு வெளிச்சம் பரவியது. அவமானம் வைராக்கியத்தை விதைத்து விருச்சமாக்கியது. யாரோடும் பேசவில்லை. புத்தகத்தை எடுத்து படிக்க

தொடங்கினாள். சாவு எதற்குமே தீர்வாகாது. பொய்களை பொய்யாக்க வாழ்ந்து காட்ட வேண்டும். சகிப்புதன்மையோடும் பொறுமையோடும் வாழ்ந்து காட்டவேண்டும். அன்று அப்பேதை சிறுமிக்கு உள்ளிருந்த உள்ளொலியும் அகவிளக்கும் அறிவு வெளிச்சத்தை தூண்டி அவளை வாழ்வின் உயரங்களை தொட துணை புரிந்தது.

அடுத்த ஆண்டு நடந்த பத்தாம் வகுப்பு பொது தேர்வில் அந்த கிராமத்து பள்ளியில் அதுவரை எந்தவொரு பெண்ணும் பெறாத மதிப்பெண்கள் பெற்று தன்னை நிரூபித்தாள் அவள். அன்று பிரிந்த அவள் தோழி அவர்கள் அனைவரது கூற்றையும் மெய்யாக்கும் வண்ணம் தேர்வில் தோற்று போனது துர்லபமா இல்லை நட்பு முறிவின் விளைவா விடைதெரியா வினாக்களின் பட்டியலில் சேர்ந்துவிட்ட கேள்வி. குஞ்சை அடைகாக்கும் கோழியை அன்று அழ வைத்த அம்மா புரிந்து கொண்ட பிறகு பட்டம் போல சிறுமியை சுதந்திர விண்ணில் பறக்க வைத்ததும், ஆண் பெண் பேதமற்று அத்துணை நண்பர்களையும் வீட்டுக்கு அனுமதித்ததும், அன்பாய் உணவிட்டு அனுசரிப்பதும் இன்று வரை மகளை பற்றிய பெருமிதம் அந்த கிராமத்து தாய்க்கு ஏராளம்.

பிள்ளைகளை பட்டம் போல பறக்க விட்டு கவனிப்பு எனும் நூல் கொண்டு தேவைக்கேற்ப கட்டுப்படுத்த படிக்காத அந்த தாய்க்கு யார் கற்று தந்தது. மேலும் படித்து பனிரெண்டாம் வகுப்பு தேர்விலும் நல்ல மதிப்பெண்கள் பெற்று பல தடைகளை தாண்டி அவள் கனவு கண்டது போல் தொழில்நுட்ப உயர்கல்வி பயின்று சிறப்பாக பணி செய்து வருகிறாள். அவளது அகக்குரல் தான் இன்று வரை அவளை வழி நடந்து செல்கிறது. இன்னும் உயரங்களை தொட்டுவிட அவள் உழைத்து கொண்டே இருப்பாள் அக்குரலின் வழிகாட்டலோடு.

ஒவ்வொருக்குள்ளும் ஒரு குரல் இருக்கிறது அதை மனசாட்சி, ஆத்மா என எப்படி வேண்டுமானாலும் பெயரிடலாம். அதற்கு சத்தியம் ஒன்றே தெரியும். அது சொல்வதெல்லாம் அறவழிதான். யார் ஒருவர் அதை கேட்க தொடங்குகிறார்களோ அவர்களுக்குள் அந்த சத்திய அறவழி குரல் ஆட்சி செய்யும். அவர்கள் செல்லும் வழி எல்லாம் சிறப்புத்தரும். மலையை போன்ற துன்பம் வந்தாலும் அதை தகர்த்தெறியும் வலிமையை, வழியை அவர்களுக்கு அந்த அறவழி அகக்குரல் காட்டிக் கொண்டே இருக்கும்.

முற்றும்.

**– இளவரசி இளங்கோவன்,**
பரவாக்கோட்டை

## அம்மாவுக்குத் தெரியாமல்

விடுமுறை நாட்களில்,
நண்பர்களுடன்
நதிகளில் சேகரித்து
வந்த,
கூழாங்கல் இன்னும்
என்னிடம் பத்திரமாக இருக்கிறது...
நதியைத் தான் காணவில்லை!

****

## என்னோடு

கடுமையாய் போராடி
வெற்றிபெற
வேண்டிய போட்டியில்
எளிதாய் வெற்றிப்பெறுகிறாள்...மகள்,
ஒரு முத்தத்தை தந்து!

*****

## நடு இரவொன்றில்,

தாங்க முடியாத குளிரில்
வசிக்க இடமில்லாமல்
வீதிகளில்
ஓடித் தெரியும் நாய்க்குட்டிக்கு,
என்னால்
உதவ முடியாத தருணங்களில்,
மறுஜென்மம்
வேண்டுகிறேன்...பேகனுக்கு!

****

## கவிஞர்களின்

கையில் எல்லாம்,
இப்போது பேனாக்களை
பார்க்க முடிவதில்லை ...
கையடக்க பேசியில்
கச்சிதமாய்
எழுதி முடித்துவிடுகிறார்கள்...
தங்களின்
கவிதைகளை,
இப்போது பெருமூச்சு
விட்டுக்
கொண்டிருக்கிறது...
சில மரங்கள்!

****



மு.முபாரக்

## கடை
## வீதிகளை கடக்கும்

தருணங்களில்,
ஏழை அப்பாவின்
முகத்தில்
புன்னகையை வரவழைக்கிறது...
எதுவும் வேண்டாம் பா,
என்ற
குழந்தைகளின் ஒற்றை வார்த்தை!

***

## நான் அதிகம் நேசிப்பது

மனிதர்களை அல்ல,
நல்ல புத்தகங்களைத் தான்,
அவை தான் இதுவரை,
என்னை
அழ வைத்ததில்லை...
அம்மாவைப் போல்!

*****

## நான்

சாலையை கடக்கும்
போதெல்லாம்,
என்னைப் பார்த்து
புன்னகைக்கிறது...
எப்போதோ ஒரு முறை
நீர் ஊற்றிய மரம்

## அவசரப்

பயணமென்றாலும்
திரும்பிப் பார்க்க வைக்கிறது...
அம்மாவைப் போல்
இருக்கும்,
ஒவ்வொரு முகங்களும்!

மு.முபாரக் (எழுத்தர் )
எண் 273 வாளாடி கூட்டுறவு வங்கி,
வாளாடி.
இலால்குடி வட்டம்.
திருச்சி மாவட்டம் - 621218
அலைபேசி: 8072600090

---

## நீ

உன்னிடம் தொலைந்த மனம்
அதை திருப்பி கேட்கவில்லை
எடுத்து சென்று விட்டாய்
இனி உறக்கம் ஏதுமில்லை
தனித்த சுவரிடம்
தயங்கி கேட்கிறேன்
என் தனிமையில்
அவன் நினைவுகளை எழுப்பாதே
நித்தம் வீழ்கிறேன்
விதியின் எல்லை எது?
உறங்க போகட்டுமா
மறுநாள் வீழாது
மீள வழியுண்டோ என்று!

## எண்ணங்கள் எழுத்தாக

எழுத்துகள் கவி ஆக
கவி நீயாக
நீ எனக்காக என!

## மனத்திரையில் விரியும் காட்சியில்

நித்தம் நீ வருவாய்
ஏனோ சற்றென்று
மயங்கி நின்றபடி
வெற்றிட காற்றில்
மறைந்து போக
கண்கள் அசையுமே
கனவென்று

--

கனிமொழி சீனிவாசன்

# படித்த விவசாயி...

பெற்றோரின் / மற்றோரின் விருப்பத்திற்கு இணங்க இயந்திர பொறியியல் படிப்பை படித்தேன்..

படிப்பை முடித்ததுமே படிப்பிற்கு தகுந்த பணியை தன் வசம் கொள்ள துடித்தேன்..

பட்டணமெங்கும் காலடி பதித்தபின் கிடைத்த தரம் தாழ்ந்த பணியை மனதார செய்வதாக நடித்தேன்..

நடித்துக்கொண்டிருக்கும் புத்தியை நறுக்கென கேள்விகள் கேட்ட மனசாட்சி முன்பு கூனி குறுகினேன்..

இத்துணை காலமாய் சேர்த்தது உமக்கு தானே வீட்டோடு சேர்ந்திடு என்ற கூச்சலால் வீடு திரும்பினேன்..

விளையாட்டாய் விதை நெல்லை வீசியெறிய லாபமாய் மாறிய விளைச்சல் கண்டு வியந்தேன்..

எவனோ ஒருவனிடம் சம்பளம் வாங்கியது போதுமென
என் நிலத்தின் மூலம் பலருக்கு வேலை வாய்ப்பளித்து சம்பளம் வழங்க பழகினேன்..

ஆறு மாத உழைப்புக்கு இணையாய் அறுவடை காலம் தரும் சுகம் கண்டு மகிழ்ந்தேன்..

சிந்திய வியர்வைகள் நெல் முத்துக்களாய் நிமிர கண்டு நெஞ்சம் குளிர்ந்தேன்..

இத்துணை உணர்வுகளையும் ஒரு நொடி பார்வையில் பொசுக்கும் உறவுகளை சகித்து கொள்ளவும் பழகி கொண்டேன்..

படிப்பிற்கும் தொழிலுக்கும் இடையில் இல்லாத தொடர்பை அடிக்கோடிட்டு பார்க்கும் உறவுகளே, என் தொழிலுக்கும் அதன் வழி நான் கொள்ளும் திருப்திக்கும் இடையே உள்ள தொடர்பையும் உடன் காணுங்கள்..



சுபஸ்ரீ விசுவலிங்கம், B.E.,
வேப்பங்குளம்.

# தேநீரின் பிசுபிசுப்பு

‘‘ஓய் நித்தி.. என்னம்மா இவ்ளோ சீரியஸா உக்காந்திருக்க?? என்ன அடுத்த கதைக்கு கன்டன்ட் ரெடி பண்ணிட்டிருக்கியா??’’, என ஆழ்ந்த யோசனையில் அமர்ந்திருந்த தன் தோழியின் தோளை தட்டிவிட்டு அருகிலிருந்த கட்டிலில் தன் தோள் பையை வீசிவிட்டு அமர்ந்தாள் சந்தியா..

சந்தியாவின் தீண்டலில் சுயத்திற்கு வந்தவள் ‘ஒன்னும்மில்லடி.. இன்னைக்கு என் கண்ணுல பட்ட விஷயத்தெல்லாம் யோசிச்சிட்டிருந்தேன்’, என எப்பொழுதோ ஹாஸ்டல் கேன்டினிலிருந்து பிடித்து வந்த ஆறிய தேநீரை குடிக்கலாமா வேண்டாமா என யோசித்து கொண்டிருந்தாள்..

‘‘அப்படி என்ன இன்னைக்கு நடந்துச்சு மேடமோட வாழ்க்கைல?? என்ன யாராவது டீஸ் பண்ணாங்களா?? இல்ல ஃபாலோ பண்ணி வர்றாங்களா?? இல்ல ஆஃபீஸ்ல எதாவது ப்ராப்ளமா?? என்ன அந்த நெட்ட சொட்ட மேனேஜர் சீண்டினானா??’’, என இதற்கு முன் அவள் கூறிய விஷயங்களாக இருக்குமோ என அடுக்கி கொண்டிருந்தாள் சந்தியா..

’விட்டா நீயே இதெல்லாம் நடக்க சொல்லி சாபம் குடுப்ப போல.. இதெல்லாம் எனக்கு பழகிடுச்சு.. ஐ கேன் டேக் கேர் ஆஃப் மைசெல்ஃப்’’, என கூறியவள் கையில் வைத்திருந்த தேநீர் கோப்பையை டேபிளில் வைத்துவிட்டு சந்தியாவை நோக்கி திரும்பினாள்..

‘‘ஏன் சன், இந்த சொசைட்டினா என்ன??’’

‘‘என்னடி திடீர்னு எனக்கு இப்படி ஆராய்ச்சி பண்ற அளவுக்கு மூளை இல்லனு உனக்கு நல்லாவே தெரியும்’’, விளையாட்டாய் பதிலளித்தவள் நித்யாவின் சற்று மாறிய முகத்தைக் கண்டு...

‘‘நம்ம சுத்தி இருக்கவங்கடி’’, என்றாள் தப்பித்த குரலில்..

‘‘நம்ம சுத்தி இருக்கவங்க னா.. யாரெல்லாம் சொல்லுவ?’’

‘‘நம்ம சுத்தி இருக்கவங்கனா நம்ம சுத்தி இருக்கவங்க தான்.. இதுல நா யாரன்னு பின் பாய்ன்ட் பண்ணி சொல்ல முடியும் நம்ம அப்பா அம்மா, குடும்பம், படிக்கும்போது ஃப்ரண்ட்ஸ், அந்த இன்ஸ்டிட்யூஷன், ஒர்க்குக்கு போறவங்களுக்கு அந்த ஆஃபீஸ், போர வர்ற இடம், இப்படி எல்லாமே சொல்லலாமே டி’’

‘‘அப்போ சொசைட்டினா நம்மல இன்ப்ளுயன்ஸ் பண்ற, நாம இன்ப்ளுயன்ஸ் பண்ற மனுஷங்க தான்-ல’’, என மற்றுமொரு சந்தேகத்தை முன் வைத்தாள் நித்யா..

அவள் பேசுவது புதிராய் இருப்பதாய் உணர்ந்த சந்தியா, ‘‘அம்மா தாயே இப்படி சுத்தி வளைச்சு கேள்வி கேட்டு என்ன பைத்தியமாக்காத, நானே அந்த டி.எல் என்ன திட்டிட்டான்ற கடுப்புல இருக்கேன்’’, என சற்று சளித்துக்கொண்டவளாய் தன் படுக்கையில் படுத்து கண்ணை மூடி கொண்டாள் சந்தியா..

‘‘சரி, சரி, டென்ஷன் ஆகாத.. என்னன்னு சொல்றேன்.. என்கூட ஒர்க் பண்ற வினோத் தெரியும்ல.. அவனும் கவிதை கட்டுரைனு எழுதுவான்ல.. அவனோட தான் ஒரு இஷ்யூ ஆய்டுச்சு‘‘

‘‘என்னடி சொல்ற?? என்ன கவிதைல காதல சொல்லிட்டானா??’’, என துள்ளி எழுந்த சந்தியா அவளை கட்டியணைத்தவாறு கேட்டாள்.

‘‘காதல சொல்லியிருந்தா பரவால்ல.. அவன் ஒரு மாதிரி அசிங்கப்படுத்திட்டான்.. ஐ திங்க் ஹீ இஸ் எ மேல் சாவனிஸ்ட்’’, என சந்தியாவின் அணைப்பை விலக்கியபடி தன் மெத்தையில் சென்றமர்ந்தாள் நித்யா.

‘‘என்னடி சொல்ற.. கொஞ்சம் புரியற மாதிரி சொல்லு‘‘

‘‘ஒன்னுமில்லடி.. கொஞ்ச நாள் முன்னாடி ஆஃபிஸ் கல்ச்சுரல்க்கு நான் ஒரு கவிதை வாசிச்சேன்ல... மேல் ப்ராஸ்டிட்யூஷன் பத்தி.. நீ கூட படிச்சுட்டு நல்லா இருக்குன்னு சொன்னியே..அந்த கவிதைனால வந்த பிரச்சன‘‘

‘‘அந்த கவிதைக்கு என்ன டி?? நல்லா தான இருந்துச்சு.. எனக்கு வித்தியாசமாவும் இருந்துச்சு.. எப்பயும் விலை’மாது’-னு தான் நா படிச்சிருக்கேன்.. நீ விலை’மகன்’னு எழுதவும் எனக்கு ஆச்சர்யம் தான்.. உங்க ஆஃபீஸ்ல கூட நெறய பேரு அப்ரிசியேட் பண்ணதா சொன்னியே.. சரி அப்டி இவன் என்ன சொன்னான்னு இவ்ளோ டீப்பா யோசிச்சிட்டிருக்க??‘‘, என அவள் அருகில் அமர்ந்தாள் சந்தியா..

‘‘இன்னைக்கு ப்ரேக்ல கேஃபிடேரியால உக்காந்திருக்கும்போது ஏதோ பேச்சு வந்து இன்னொரு டீம் பொண்ண பத்தி டாக் வந்துச்சு.. அவளோட கேரக்டர் சரியில்ல.. ஆஃபீஸ்லயே நெறய பேரோட ரிலேஷன்ஷிப் வச்சிருக்கா அப்டி இப்டின்னு.. எல்லாருமே ஒவ்வொரு ஒப்பினியனா சொல்லிட்டிருந்தாங்க.. நானும் என்னோட ஒப்பினியன் சொன்னேன்.. அவள மட்டும் பேசி என்ன பிரயோஜனம்.. அவகிட்ட போறவங்களையும்ல பேர் சொல்லனும், திட்டனும்னு‘‘,

‘‘கரக்டா தான சொல்லிருக்க‘‘ - சந்தியா சொல்ல

'' நீ சொல்ற நா கரக்டா சொன்னேன்னு... ஆனா என் கூட இருந்த யாரும் இத சொல்லலயே.. நா, வினோத், சுந்தர், மீனாட்சி, கல்பனா, ஜோசப்-னு எல்லாருமே இருந்தோம்.. ஆனா எல்லாருமே நா சொல்றத தப்புனு தான் சொன்னாங்க.. அதுலயும் அந்த வினோத் ஒரு படி மேல போய் எனக்கு லெக்ச்சர் எடுக்க ஆரம்பிச்சுட்டான்''.

''என்ன சொன்னான்?'', சந்தியா..

'' என்ன நீ வழக்கத்துல இருக்குறத பத்தி பேசாம என்னன்னமோ புதுசா சொல்ற?? அந்த காலத்துலயே பாலிகாமிலாம் வழக்கத்துல இருந்துச்சுல்ல... முள்ளு மேல சேல விழுந்தாலும் சேல மேல முள்ளு விழுந்தாலும் பாதிப்பு சேலைக்கு தான... இப்போ நீங்க படிச்சு வேலைக்கு வந்துட்டா எல்லாமே உங்க இஷ்டம்னு நெனச்சிப்பீங்களோ?? சரி நீ சொல்ற மாதிரியே அந்த மாதிரி பொண்ணுக்கிட்ட போற ஆம்பிளைகள பேர சொன்னா மட்டும் என்னவாகிடப்போது?? புடிச்சு ஜெயில்ல போட்றுவாங்களா என்ன?? அப்டியே ஜெயில்ல போட்டாலும் 'தொழில்' பண்றாங்கன்னு அந்த பொம்பளைங்கள தான் ஃபர்ஸட் புடிப்பாங்க''

''அவன் இப்படி சொன்னதும் எனக்கு கோவம் வந்து நானும், 'சரி வினோ, அப்ப தப்பெல்லாம் பெண்கள் மேலதான்னு சொல்றியா?? உங்க மேல தப்பே இல்லையா??'-னு கேட்டேன்''..

அதுக்கு அவன், ''தப்பா.. இதெல்லாம் எங்க டிக்ஷனரில தப்பே கெடையாது கற்புக்கரசின்னு உங்கள தான் பாய்ன்ட் பண்ணுவாங்க.. எங்களுக்கு அந்த ரெஸ்ட்ரிக்ஷன்ஸ் இல்லப்பா... உனக்கு எங்கள அசிங்கப்படுத்தனும்னு நெனப்பு இருந்தா சொல்லு.. நானே ரூம் புக் பண்றேன்.. நானே உனக்கு பேமன்ட் தர்றேன்.. அடுத்த நாள் நீ இத யார்க்கிட்ட வேணும்னாலும் சொல்லு... கேரக்டர்லெஸ் கேர்ள்-னு உனக்கு தான் அவார்ட் தருவாங்க... அவன் கூப்டான்னா உனக்கெங்க போச்சு புத்தின்னு உன்ன தான் பாய்ன்ட் பண்ணுவாங்க.. யூ நோ பிக்காஸ் செக்ஸ் இஸ் மென்ட் ஒன்லி ஃபார் அவர் சேட்டிஸ்ஃபேக்ஷன் உங்களுக்காகன்னு இங்க எதுவும் டிசைன் பண்ணல, பண்ணவும் மாட்டாங்க.. அப்டி நீ பண்ணனும்னு நெனச்சா யாருக்கு தெரயும் இன்னும் பல ஜென்மங்கள் கூட நீ எடுக்க வேண்டி வரும்-னு அவன் சொல்ல எல்லாரும் சிரிச்சுட்டாங்க..  சரி பசங்க தான் சிரிக்கிறாங்கன்னா இந்த கல்பனாவும் மீனாட்சியும் சேர்ந்து சிரிக்கிறாங்க.. எனக்கு அவன் என்ன சொன்னதுக்கு ஒரு பக்கம் கோவம் இருந்தாலும் இவளுக ரெண்டு பேரு கூட சேந்து சிரிச்சது தான் இன்னும் கடுப்பாய்டுச்சு'', எனக்கூறியாவாறு முகத்தை கைகளால் மறைத்து கொண்டாள்..

தோழியின் நிலையை உணர்ந்தவளாய், ''அவன் உன்ன சொன்னதுக்கு நீ எதுவுமே சொல்லலயா??'', என கேட்டாள் சந்தியா..

''எனக்கு சொல்லனும்னு தோணல.. அதுவுமில்லாம என்னன்னு சொல்றது?? அவன்

பேசுனதெல்லாம் வாடிக்கையான விஷயம் தான? இதுல கூட இருந்தவளுகளும் அவன் சொல்றது தான் சரின்னு நிக்குறப்ப நா என்ன சொல்ல முடியும்?? நா பேசிருந்தேனா எனக்கு தான் இன்னும் அசிங்கமாயிருக்கும்.. அதோட எனக்கு இந்த டாபிக் உறுத்திட்டியிருந்துச்சு..'', என மறுபடியும் ஏதோ யோசனைக்குள் புகுந்துவிட்டாள் நித்யா..

''நீ சொல்றதும் சரி தான்.. நீ பேசியிருந்தா அவன் இன்னும் அசிங்கமா பேச வாய்ப்பிருக்கு... என்ன பண்றது இப்படிப்பட்ட சமுதாயத்துல தான் நாம வாழனும்னு இருக்கு..

நியாயத்த  பேசிடலாம்..ஆனா நாம் பேசுறது நியாயம் தான்னு ஒத்துக்கக்கூட நமக்கு ஒத்தாச இல்லையே... உன்கூட இருந்த பொண்ணுங்களே உனக்கு சப்போர்ட் பண்ணலன்னு சொல்ற.. அப்போ இதே தான 100 பேர்க்குள்ளயும் இருக்கும்.. பெண்ணியம், பெண் சுதந்திரம்னு எழுதுனவங்க பேசுனவங்க எல்லாருமே அவங்க வீட்டு பொண்ணுங்கள எப்படி நடத்திருப்பாங்களோ?? யாருக்கு தெரியும்.. எப்படி சாதி, மதம்லாம் இல்லன்னு பேசிட்டிருக்கறப்பவே வன்முறைகள் நடக்குதுன்னு நியூஸ் வருதோ அப்றம் இது மட்டுமென்ன எக்சப்ஷனா?? விடு டி.. இதெல்லாமே உனக்கும் புரிஞ்சிருக்கும்.. அப்றம் ஏன் டீ அப்சட் ஆகுற??'', என சமாதானப்படுத்தியவளை பார்த்த நித்யா, தன் மெத்தையை விட்டு எழுந்தாள்.

ஆறிய தேநீர் கோப்பையைக் கையில் எடுத்தவள், ''நீயுமே என்ன தான டி சமாதானம் பண்ற... அவன் சொன்னது தப்புன்னு தெரிஞ்சும் என்ன தான அமைதியா போக சொல்ற?? கூட நீயும் நிக்காதது எனக்கு வருத்தம் தான்.. இப்போ நா யோசிக்குற மாதிரி நாளைக்கு நீயோ, உன் தங்கச்சியோ, இல்ல உன் குழந்தையோ, உன் பேரக் குழந்தையோ யோசிக்குற நெலம வரலாம்... அப்போ மறக்காம என்ட்ட பேச சொல்லு நா பேசிக்குறேன்'', என்றபடி ஆறிய தேநீரை வாஷ்பேசினில் ஊற்றியவள், தேநீர் ஊற்றியதற்கான தடயம் ஏதும் இல்லாதவாறு நீக்க தண்ணீரை திறந்து வைத்து, தன் இடப்பக்கம் இருந்த டேபிளில் ஒய்யாரமாய் அமர்ந்திருக்கும்.

''சிறந்த பெண்மணி'' என்ற விருதில் ''சந்தியா'' எனும் பெயர் சற்று பெரிதாய் பொறிக்கப்பட்டிருப்பதை புன்னகையுடன் பார்த்தவள், குழாயை மூடத்திரும்பிய நொடியில் தேநீர் கொட்டியதற்கான கறை இல்லாதிருப்பதை பெருமூச்சுடன் கண்டு நகர்ந்தாள்..



– கனிமொழி பாலாஜி

## இயல்பு
வெறுப்புக்கும் விருப்புக்கும் அதிக தூரமில்லை

வெறுக்கும் வேகத்தில் விரும்பி விடுவோம்!

## ஏக்கம்
நீ இருக்க அணைக்க
நொந்துப்போகாது என் உடல்

நீ தீ இதழ் முத்தம் வைக்க
வெந்துப்போகாது என் உதடு!

## பேரழகு
கூடல் முடிந்து களைந்து கிடக்கும் ஆடையில்
குவிந்து கிடக்கும் அவள்!

## இயந்திரமயம்
உனக்கான நேரம் கொடுக்க
எனக்கான நேரம் என்னிடமில்லை!

## பிரிவு
நீ இல்லை என்பதை அறிந்த போது
நீ எத்தனை முக்கியம் என்பதை உணர்ந்தேன்!

## போதை
புழு உடம்பில் ஊர்வது சுகம் தான்
மயக்கம் தெளிந்து கண்ணில் படும் வரை!

## விரக்தி
அண்டம் பிளந்து ஆழ்கடல் விழுங்கி
ஏதுமில்லா நிலை கொண்டு இருள் சூழ்க!



மனோ குணசேகரன்
புள்ளவராயன் குடிக்காடு

# அக்கா (அவதாரம்)

அன்னையின் மறுஉருவம்
இவள்...

தந்தையின் தலைமகள்
இவள்...

வீட்டின் குலமகள்
இவள்...

தமையனின் தாய்
இவள்...

குடும்பத்தின் குட்டிதேவதை
இவள்...

எல்லோருக்கும் கிடைக்காத
பாக்கியம் இவள்...

அள்ள அள்ள குறையாத
அன்பு கொண்டவள்
இவள்...

குடும்பத்தின் ஆணிவேர்
இவள்...

வரவு செலவு பார்ப்பதில்
கெட்டிக்காரி இவள்...

தாயின் சுகமான பாரத்தை குறைக்க
வந்த சுமைதாங்கி
இவள்...

நிலாச்சோறு சாப்பிட்டு வளர்ந்தவள்
இவள்...

நிலவிற்கே போய் தம்பிக்கு
சோறுட்ட நினைப்பவள்
இவள்...



S.S. கார்த்திக்

குடிசை
வீடையும்
கோபுரமாய்
மாற்றும்
குணாதிசயம்
கொண்டவள்
இவள்...

குடும்பத்தின்
குளவிளக்கு
இவள்...
பாசத்தின் பந்தம் இவள்...

பார்வையிலே பாசம் பொழிந்திடுவாள்
இவள்...
நெஞ்சிலே நேசம் வைத்திடுவாள்
இவள்...

அன்பினால் அரவணைப்பாள்
இவள்...

ஊர்வம்பு செய்யும்
குறும்புக்கார தம்பிகளை
தந்தையிடம்
பாதுகாக்கும் பலசாலி
இவள்....

என்னை யாரிடமும் விட்டுகொடுத்து
பேசாதவள் இவள்...

மணம்முடித்து மறுவீடு
சென்றாலும்
மனம்மாறாத மங்கை
இவள்...

பிறந்தவீட்டின் புண்ணியவதி
இவள்...

மாமன் என்னும் பாக்கியத்தை
தம்பிகளுக்கும் அண்ணன்களுக்கும்
தரும்
மகராசி இவள்....

தன் பெற்ற பிள்ளையை தம்பிகளின்
மடியில் போட்டு அழகு பார்க்கும்
அன்னை இவள்....

தன் வாழ்வில் பல துன்பங்கள்
வந்தாலும் வெளிக்காட்ட தெரியாத
வெகுளி குணம் கொண்டவள்
இவள்...

தம்பிகளின் வாழ்க்கையினை
முன்னேற்ற நினைக்கும் தலைவி
இவள்....

இவள் போல் அன்புவைக்க
இவ்வுலகில் யாரும் இல்லை...
இவள்தான் குடும்பத்தின்
செல்லப்பிள்ளை....

இவள்தான் இவ்வுலகில்
எனக்குகிடைத்த பெரும்பந்தம்...
எல்லோருக்கும் வாய்த்திடாது
இந்த சொந்தம்....

அக்கா(அன்னை)களுக்கு
சமர்ப்பணம்......

அன்புடன்,
S.S.கார்த்திக், DCA, DME,
உள்ளிக்கோட்டை

---



கண்ணன் வரும் வேளை,
அந்தி மாலை,
நான் காத்திருந்தேன்...

– ஆசிரியை ரோஸி



# மன அழுத்தம்


விக்னேசுவரி

இந்த தலைப்பை படிக்கும் போது, என்னடா போன சூன் மாதம் தான், எல்லாரும் மன அழுத்ததை பற்றி இணையதளத்தில் பகிர்ந்து கொண்டிருந்தார்கள், இப்போ மறுபடியுமா என்று உங்களுக்கு யோசிக்க கூடும்?

சில விடயங்கள் நாம் எத்தனை முறை படிக்கிறோம், எத்தனை முறை பார்க்கிறோம் என்பது முக்கியம் அல்ல, நாம் அந்த விடயத்தை புரிந்து கொண்டு செயல்படுத்துகிறோமா என்பதுதான் முக்கியம்.

நான் தலைப்புக்குள் போகும் முன்பு சில வார்த்தைகளுக்கான பொருளைப் புரிந்து கொள்வோம்.

துக்கம் என்றால் என்ன?

இதற்கு ஆங்கிலத்தில் grief, sorrow என்று பொருள். உதாரணமாக நமக்கு நெருக்கமானவர் இறந்து விட்டால் நாம் மிகவும் துக்கத்தில் ஆழ்வோம். துக்கம் சிறிது காலம் வரை நீடிக்கும். ஒருவர் துக்கம் கொண்டாலும், அவர்களால் மற்ற வேலைகளில் கவனம் செலுத்த இயலும். ஆனால் துக்கம் அதிகமானால், அது மன அழுத்தத்திற்கு வழி வகுக்கும்.

சோகம் (Sad) என்றால் என்ன?

சோகம், என்பது ஒரு விதமான உணர்ச்சி வலி ஆகும். இது துக்கம், ஏமாற்றம், இழப்பு என்ற உணர்வுகளோடு சமந்தப்பட்டவை. சோகம் அதிகமானால், அது மன அழுத்தத்திற்கு வழி வகுக்கும். சோகமாக இருக்கும் நபர் தம்மை மற்றவர்களிடமிருந்து தனிமைப்படுத்திக்கொள்வர். இவர் எப்போதும் சோம்பலாகவும், எந்த ஒரு விடயத்திலும் ஈடுபாடு காட்ட மாட்டார்கள். சில நேரம் தனியாக அழுக செய்வார்கள்.

மன அழுத்தம் என்றால் என்ன?

மன அழுத்தத்ததை தான் நாம் ஆங்கிலத்தில் Depression என்று கூறுகிறோம். என்னுடய தனிப்பட்ட அனுபவத்தில், இந்த மனஅழுத்தம் புற்றுநோயை விட கொடிய விசம் ஆகும். நாம் மேலே கண்ட துக்கம், ஏமாற்றம், இழப்பு, விரக்தி இவை அதிகமானால் ஒருவர் மன அழுத்தத்தால் பாதிக்கப்படுவார்.

சோகம், துக்கம், நம்பிக்கையின்மை நம் வாழ்வில் ஒரு பகுதிதான். ஆனால் நாம் நாள் முழுக்க, மாத கணக்கில் சோகத்துடனும், துக்கத்துடனும் இருந்தால் மன அழுத்தத்திற்கு

ஆளாகிவிடுவோம்.

மன அழுத்ததினால் ஒருவருடைய இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படும். அவர்களுடைய மனதிலும், மூளையிலும், மன அழுத்தத்திற்கு காரணமான அந்த ஒரே சிந்தனை ஓடிக்கொண்டே இருக்கும். உங்களிடம் நன்றாக பேசிக்கொண்டு இருப்பதாக தோன்றும், ஆனால் அவர்கள் மனதிலும், மூளையிலும் வேறொரு சிந்தனை ஓடிக்கொண்டே இருக்கும். இவர்கள் தனிமையில் அழுது கொண்டே இருப்பார்கள். நீங்கள் சொல்லலாம், அழுதால் மனத்தில் உள்ள பாரம் குறையும் என்று. ஆனால் இவர்களுக்கு மனத்தில் உள்ள பாரம் அப்போது தான் அதிகரிக்கும். இவையெல்லாம் அவர்கள் தனி ஒருவர் அனுபவிக்கும் வேதனைகள், நம்மால் பார்க்க இயலாத ஒன்று ஆகும்.

மன அழுத்தத்தின் அறிகுறிகள் என்னவென்று பார்க்கலாம்:

1. மனநிலை வேறுபாடுகள் அதிக கோவம், தாக்கும் மனப்பான்மை, எல்லாவற்றிற்கும் எரிச்சல் படுதல், பதட்டம், ஓய்வின்மை.

2. உணர்ச்சி நல்வாழ்வு சோகம், நம்பிக்கையின்மை, எப்போதும் வெறுமையாக (feeling empty or void) உணர்தல்.

3. நடத்தையில் மாற்றம் எதிலும் ஆர்வம் இல்லாமல் இருத்தல், பிடித்த விடயத்தில் இன்பம் உணராமல் இருத்தல் (உதாரணமாக, பிடித்த பாட்டை கேட்பதில் கூட எரிச்சல் ஏற்படும்), எளிதில் சோர்வாக உணர்தல், குடிபழக்கம், மயக்க மருந்து பயன்படுத்துதல், தற்கொலை எண்ணம், தன்னை தானே வருத்திக்கொள்ளுதல்

4. பாலியல் ஆர்வம் பாலியல் ஆசை குறைதல், பாலியல் செயல் திறன் இல்லாமல் இருத்தல்.

5. அறிவாற்றல் திறன்கள் ஒரு விடயத்தில் கவனம் செலுத்த இயலாமல் போகுதல், பணிகளை முடிப்பதில் சிரமம் ஏற்படுதல், உரையாடல்களின் போது தாமதமான பதில்கள் (அறிவாற்றல் திறன் குறைபாடு சிறு குழந்தைகள் முதல் பெரியவர்கள் ஆண், பெண் இருவரிடமும் காணலாம். ஆம், சிறு குழந்தைகள் கூட மன அழுத்ததினால் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களின் மதிப்பெண்கள் கூட இதனால் குறையும்).

6. தூக்க முறைகள் தூக்கமின்மை (insomnia), அமைதியற்ற தூக்கம், அதிக தூக்கம், இரவு முழுவதும் தூங்காமல் இருத்தல்.

7. உடல் நலம் சோர்வு, தலைவலி, செரிமான பிரச்சனைகள், கூடுதலாக பெண்களுக்கு

பசியின்மை மற்றும் உடல் பருமனில் மாற்றம் ஏற்படும்.

நாம் மேலே மன அழுத்தத்திற்கான அறிகுறிகளைப் பார்த்துவிட்டோம். இனி மன அழுத்தத்திற்கான காரணங்களை பார்ப்போம்.

மன அழுத்தத்திற்கான காரணங்கள் ஏராளமாக உள்ளன. நாம் சிலவற்றை மட்டும் பார்ப்போம்.

1. சிறு குழந்தைகள் கூட மன அழுத்தத்திற்கு பலி ஆகிறார்கள். ஓடி விளையாடும் வயதில், சாதிக்க நினைக்கும் வயதில், ஓடும் பாம்பை கையில் பிடிக்க நினைக்கும் வயதில் அவர்களுக்கு ஏன் மன அழுத்தம் ஏற்படுகிறது ?

சில பெற்றோர்கள் தன் குழந்தையை மற்றொரு குழந்தையோடு ஒப்பிடும் காரணத்தினால் தான். அது மட்டுமில்லாமல் அவர்களை அவர்கள் விருப்பபடி படிக்க விடாமல் பெற்றோரின் ஆசையை தன் குழந்தைகள் மீது திணிக்கும் காரணத்தினால் தான். பெற்றோர்கள் என்றாவது யோசித்து இருக்கிறீர்களா? நீங்கள் உங்களுக்கு பிடித்த தொழிலை, உங்களுக்கு பிடித்த அல்லது தெரிந்த வேலையை செய்கிறீர்களா? உங்களுக்கு செய்யவே தெரியாத வேலையை உங்களால் செய்ய இயலுமா? முடியாது இல்லையா? பிறகு ஏன், உங்கள் குழந்தைகளுக்கு மட்டும் திணிக்கிறார்கள்? இதனால் சில குழந்தைகள் அவர்கள் விரும்பியதை செய்ய முடியாமலும், தன் பெற்றோர் ஆசையை நிறைவேற்ற முடியாமலும் மன அழுத்ததிற்கு ஆளாகிறார்கள். மேலும் சில குழந்தைகள், பொது தேர்வில் மற்றும் நுழைவு தேர்வில் போதிய மதிப்பெண் எடுக்க முடியாத காரணத்தினால் மன அழுத்தம் கொண்டு தற்கொலை செய்கிறார்கள்.

உங்கள் குழந்தைகளுக்கு, நீ முதல் மதிப்பெண் எடுத்தால், செல்போன் வாங்கி தருவேன் என்று சொல்வதைவிட, நீ விடாமுயற்சியுடன் படி. எந்த மதிப்பெண் வாங்கினாலும் கவலை இல்லை. விடாமுயற்சியுடன் மட்டும் படித்தால் செல்போன் வாங்கி தருவேன் என்று சொல்லி பாருங்கள், உங்கள் குழந்தைகள் கவலை இல்லாமல் படிப்பார்கள்.

2. கல்லூரி படிப்பை முடித்துவிட்டு, வேலை கிடைக்காமல், வேலை தேடும் பட்டதாரிக்கு ஏற்கெனவே தான் படித்து முடித்து பெற்றோர் பணத்தில் வாழ்ந்து கொண்டு வருகிறோம், இன்னும் வேலை கிடைக்கவில்லை என்ற மன அழுத்தம் இருக்கும், அவர்களிடம் சிலர் வேலை இல்லாத காரணத்தினால் அவர்களின் திறமையை குறைவாக எண்ணி, இழிவுப்படுத்துவார்கள் நம் மக்கள். இது அந்த வேலை இல்லாத பட்டதாரிக்கு மேலும் மன அழுத்ததை அதிகரிக்க செய்கிறது.

3. பிறகு குடும்பத்தில், கணவன் மனைவி இருவருக்கும் புரிதல் இல்லாத காரணத்தினால், கடன் தொல்லையால், சிலருக்கு உறவினர்கள் இழிவுப்படுத்தும் காரணத்தினால் மன அழுத்தம் ஏற்படுகிறது. இதுவே விவாகரத்துக்கு வழி வகுக்கிறது. இது எல்லாம் ஒரு பிரச்சனையா என்று நினைப்பவர்கள் தப்பி விடுவார்கள், இதுதான் பெரிய பிரச்சனை என்று நினைப்பவர்கள் அவதிப்படுகிறார்கள்.

4. காதல் தோல்வி இது சில இளைஞர்களுக்கு பெரும் பிரச்சனையாக உள்ளது.

5. அலுவலக பிரச்சனை, வெளிநாட்டில் தனியாக வேலை பார்ப்பதால் தன் கூட எவரும் இல்லை என்கிற மன அழுத்தம், என்றோ சிறு வயதில் நடந்த கொடுமையான விடயத்தால் ஏற்பட்ட தாக்கம், தனக்கான அங்கீகாரம் கிடைக்காமல் இருத்தல், தனக்கு நெருக்கமானவரின் உயிர் இழப்பு என்று நாம் சொல்லிக்கொண்டே போகலாம்.

இதில் எல்லார்க்கும் அவரவர் பிரச்சனை பெரிதாக உள்ளது. ஆம், நிச்சயம் பெரிதுதான்.

இந்த மாதிரி பல பேர் பல பிரச்சனைகளில் சிக்கிக்கொண்டு தவிக்கிறார்கள். சில பேர் அந்த பிரச்சனைகள் அறிந்து கொண்டு, அதற்கான தீர்வு என்ன என்று கண்டுபிடித்து அதில் இருந்து வர முயற்சி செய்கிறார்கள்.

இன்னும் சில பேர் அதற்கான தீர்வு தெரிந்தாலும், மன அழுத்தத்தில் அதிகமாக சிக்கி பிணைக்கப்பட்டதால், அதில் இருந்து வெளியே வர தெரியாமல் தன்னை தானே வருத்திக்கொண்டும், அழுதுகொண்டும் தன் வாழ்க்கையை தொலைத்து தவித்து கொண்டு இருக்கிறார்கள். இந்த மாதிரி தவிப்பவர்களுக்கு தான் மற்றவர்களுடைய உதவி மிக அவசியமாக தேவைப்படுகிறது. அப்பொழுது அவர்கள் தன் நண்பர்களிடம் அல்லது தெரிந்தவர்களிடம் தனக்கான பிரச்சனையை சொல்ல நினைத்தால் நாம் அவர்களை ஒதுக்கி வைத்து விடுகிறோம். இன்னும் சிலர் அவர்களுடைய பிரச்சனையை கண்டு ஏளனமாக நினைத்து அவர்களை அசிங்கப்படுத்துகிறோம்.

இவ்வாறு இருக்கையில் மன அழுத்ததில் தவிப்பவர்கள், எவரிடம் சொல்வது என்று தெரியாமல் தனக்குள் வைத்து தவித்து கொள்வதோடு, சிலர் தற்கொலை செய்வார்கள், இன்னும் சிலர் மனநோயாளி ஆகிவிடுகிறார்கள்.

மன அழுத்ததில் தவிப்பவர்களுக்கு, ஒன்றே ஒன்று தான் தேவை. நம் பிரச்சனைகளை யாரிடமாவது கூறி அதில் இருந்து தப்பித்து வெளி வரவேண்டும் என்பது தான். ஆகையால் உங்களுக்கு தெரிந்தவர்கள், இப்படி தவித்து கொண்டு இருந்தால், நீங்கள் அவர்களுக்கு காசு பணம் கொடுக்க வேண்டாம், அவர்களுக்கு உங்கள் நேரத்தை மட்டும் தாருங்கள். அதுவே உங்கள் நண்பர்களுக்கு போதுமானதாக இருக்கும்.

ஆங்கிலத்தில் ஒரு பழமொழி இருக்கிறது Accept and Go. வாழ்வில் நமக்கு எது நடந்தாலும் ஏற்றுக்கொள்ள பழகிக்கொள்ள வேண்டும். அது அப்படியே ஏற்றுக்கொண்டு, அதற்கான தீர்வு இருந்தால் நல்லது இல்லையென்றால் அதை குறித்து கவலை கொள்ள அவசியம் இல்லை. நானும் இந்த Accept and Go என்ற விடயத்தை ஏற்றுக்கொண்டு வாழ முயற்சி செய்கிறேன். இதுவே மன அழுத்ததில் இருந்து வெளி வர சிறந்த வழி.

--

**விக்னேசுவரி இராமசாமி,**
சுந்தம்பட்டி.

**பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள்
பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்**

# திறவுகோல்

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த கட்டுரைகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் கொண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

---

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

---

மன்னார்குடி படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம் பெற செய்ய
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

---

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைப்பேசிக்கே மின்னிதழை பெற
பகிரி: +91 8220567322

---

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய
http://maintharkal.mannai.in

---

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

கி. மாணிக்கம்
திறவுகோல் ஆசிரியர் குழு

## 2015ம் ஆண்டு முதல்
## மன்னையின் மைந்தர்கள் குழுவின் பணிகள் ....

காவிரி, உரிமை மீட்பு குழுவின் பனங்குடி, இந்திய அரசின் பெட்ரோலிய ஆலை முற்றுகை போராட்டத்தில் மன்னையின் மைந்தர்கள் பிற போராட்ட குழுவுடன்

சீமை கருவேல மரம் அழிப்பு மன்னை தொடர்வண்டி நிலையம் அருகில்

இரத்த தான முகாம்

கடலூர் வெள்ள நிவாரண பணிகள்

பூமியை காப்போம் கருத்தரங்கம் (தேசிய மேல்நிலைப் பள்ளி - மன்னார்குடி)

நம்மாழ்வார் பூங்கா அமைத்தல் (தொடர் வண்டி நிலையம் அருகில் )

நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு

தோழர் கு. முத்துகுமார் 7ம் ஆண்டு நினைவு நாள்

உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்கள் பங்குபெற்ற நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம்

தொடர்வண்டி நிலைய கருவேல மரம் அகற்றல் மற்றும் சமநிலைப்படுத்துதல்

உலக சுற்றுசூழல் தின அன்று தொடர்வண்டி நிலையத்தில் இருக்கும் கருவை மரங்களை அகற்றும் பணி நடைபெற்றது

ஜி. ஆர். தோப்பு சீமை கருவேல மரங்கள் அழிப்பு

மாணாக்கர்களுக்கு கையேடு, எழுதுகோல் வழங்கிய மன்னையின் மைந்தர்கள் குழு

நம்மாழ்வார் ஏரியில் நடைபெற்ற பணிகள்
சீமை கருவேல மரங்கள் அழிப்பிற்கு பின் தூர்வாரி மீட்டெடுத்தல்
பழைய சுவர்களில் வெள்ளையடித்தல்
நிலத்தடி நீர் அதிகரிக்க வேண்டி செய்த பணி
குழாய் பதிக்கும் பணி
விதை விதைப்பு, மரக்கன்றுகள் நடப்பு

திறவுகோல் மின்னிதழ் வெளியீடு

மன்னையின் மைந்தர்கள்
மண்ணின் மாற்றத்தை நோக்கி

## எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்

**+91 8220567322**

http://maintharkal.mannai.in

MannaiyinMaintharkal Thiravukolmagazine